விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 23 ஸபர் 4 இதழ் 241
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-10-1986

திருமலை மாவட்டத்தின் நிலையை நேரில் கண்டறிய

## வெளிநாட்டு பத்திரிகையாளர் பலர் அங்கு விரைவு

கொழும்பு, புதன்.

திருமலை மாவட்டத்தின் தற்போதைய நிலையையும் அங்கு மக்கள் படும் துயரங்களையும் நேரில் கண்டறிவதற்காக பல வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் திருமலைக்கு சென்றுள்ளனர்.

திருகோணமலை சாம்பல் தீவில் இராணுவத்தால் பல பொதுமக்கள் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், விமானப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளின்போது பல கிராமங்களின் மீது குண்டுகளை பொழிந்துள்ளார்களென்றும் இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபல இரு ஆங்கிலப் பத்திரிகைகளும் பல உலக செய்தி ஸ்தாபனங்களும் நேற்றுச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

வெளியிடப்பட்ட இச்செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவத்தினர் குப்பகுதிகளில் தீவைத்தல், கொள்ளையடித்தல், பலாத்காரச்செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்

(9-ம் பக்கம் பார்க்க)

இனப் பிரச்னை: மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தை பற்றி ஆராய

# எம். ஜி. ஆர். தலைமையிலான குழு புதுடில்லி விரைந்தது

## போராளிகளையும் பங்குபற்றச்செய்ய முயற்சி

புதுடில்லி, ஒக் 8

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அமைச்சர்கள், மற்றும் உயர் அதிகாரிகளுடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நால்வர் அடங்கிய குழுவொன்று நேற்றுப் புதுடில்லி விரைந்துள்ளது.**

தமிழ்நாடு நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மின்சக்தி அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், அ.தி.மு.க பாராளுமன்ற உறுப்பினர் எஸ். குழந்தைவேலு ஆகியோரே அக்குழுவின் மற்றைய அங்கத்தவர்களாவர்.

அண்மையில் மத்திய சீர்திருத்த இணையமைச்சர் பி சிதம்பரம், இந்தியஅரசியல்நிபுணர் எஸ்.பாலகிருஷ்ணன் ஆகியோர் சென்னை வந்து தமிழர் விடுதலைக் கூட்டணியினருடனும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோருடனும், இலங்கை அரசாங்கம் முன்வைத்த உத்தேச யோசனைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கை அரசாங்கம் தனது கடைசி யோசனைகளில் மாகாண இணைப்பு அல்லது மொழிவாரி மாநிலம் என்ற கூட்டணியினரின் கோரிக்கைக்கு மாற்று யோசனையாக எல்லை நிர்ணயக் கமிஷன் நியமிப்பது தொடர்பாக அறிவித்திருந்தது. எனினும் இந்த யோசனையை தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்துத் தயது

[10ம் பக்கம் பார்க்க]

சார்க் மகாநாட்டில்

## ஜனாதிபதி ஜயவர்த்தனவை ராஜீவ் சந்தித்துப் பேசுவார்

புதுடில்லி, ஒக்டோபர் 8

பெங்களூரில் அடுத்த, மாத ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் சார்க் மகாநாட்டின் போது இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனவைச் சந்தித்துப் பேசுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சார்க் மகாநாட்டை முன்னிட்டு இனப் பிரச்னை தொடர்பாக இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் நடைபெறவிருக்கும் மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இப்

[9ம் பக்கம் பார்க்க]

விரிவுரையாளருக்கு

## அஞ்சலி

[நமது நிருபர்]

தலவாக்கொல்லை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விடுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பலியான உடற்கல்வி விரிவுரையாளர் என். பத்மநாதனின் சடலம் நேற்று அஞ்சலிக்காக கலாசாலை மண்டபத்தில் வைக்கப்பட்டது.

கலாசாலை உட்பட சகல பாடசாலை ஆசிரியர்கள், மாண

[9-ம் பக்கம் பார்க்க]

நயினாதீவில்

## கைதானவர்கள் பற்றி தகவல் கிடைக்கவில்லை

சுண்டிக்குளி, புதன்

நயினாதீவில் உண்ணாவிரதமிருந்ததாக கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களும் நேற்று முன்தினம் நயினாதீவு முகாமிலிருந்து வேறு முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்

இவர்கள் ஆறு பேரும் எந்த முகாமில் இருக்கிறார்கள் என்று அறிவதற்காக இவர்களுடைய பெற்றோரும் உறவினர்களும் நேற்று யாழ். அரசாங்க அதிபரை சந்திக்கச் சென்றனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

சாம்பல்தீவு

## தேவாலய அகதிகளுக்கு உணவு வழங்கப்படவில்லை

[நமது நிருபர்]

திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருப்போருக்கு நேற்று வரை சரிவர உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹெலிகொப்டரிலிருந்தும், பீரங்கிப் படகுகளிலிருந்தும், தரை மார்க்கமாகவும் பலஆயிரக்கணக்கான ஆயுதப்படையினர் சாம்பல் தீவு, சல்லிக்கிராமம் ஆகியவற்றை முற்றுகையிட்டு தேடுதல் வேட்டை நடாத்தியதும், அங்கு முகாம் அமைத்துள்ளதும் தெரிந்ததே.

அங்குள்ள தேவாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்குப் போதுமான உணவுப் பொருள்கள், உடைகள் இல்லாமல் பெரும் கஷ்டநிலைக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## வேட்டைக்குச் சென்றவர் வெட்டிக் கொலை

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் வேட்டைக்கு சென்ற ஒருவரை கமாண்டோக்கள் வெட்டிக் கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிலாப்பளை என்னுமிடத்தில் ரோந்து சென்ற கமாண்டோக்கள் பதுங்கியிருந்த சமயம் காட்டிற்கு வேட்டைக்காக அவ்வழியால் சென்றுகொண்டிருந்த துரைராஜா என்பவரை கமாண்டோக்கள் பிடித்து கண்ட துண்டமாக வெட்டிக்கொலை செய்ததுடன் அவர் வைத்திருந்த பொருட்களையும் கைப்பற்றிச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

[9-ம் பக்கம் பார்க்க]

அறிவித்தல்
(பெயர் மாற்றம்)
கடந்த பல காலங்களாக
Intersun Group
என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை
மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 8-10-1986
(புதன்கிழமை) தொடக்கம்
★ GLORIA TRAVELS ★
என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை
சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.
[A-1441]

தமிழீழத்தில் பலவகையாலும் நலிந்துவரும்

## மக்களைப் பாதுகாக்கவே எமது அதிர்ஷ்டலாபச்சீட்டு

### தமிழீழ இராணுவம்

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழ் மக்களின் நன்மை கருதியும், போராட்ட காலத்தில் உயிர் இழந்தவர்களின் நினைவு நிதியாகவும் எமது போராட்ட வளர்ச்சிக்கான பங்களிப்பாகவும், எம்மால் மாதாந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு நடைமுறைக்கு வருகிறது. இது தமிழீழத்தில் பல்வேறு வகையிலும் நலிந்துவருகின்ற எம்மவர்க்கு ஆறுதலாகவும், நிவர்த்தியாகவும் அமையுமென எதிர்பார்க்கிறோம்.''

இவ்வாறு தமிழ்ஈழ இராணுவம் ''தமிழ் ஈழம் போர் நிதி'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

அதிர்ஷ்டலாபசீட்டு ஆரம்பித்து நடாத்துவது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''பேச்சுவார்த்தை என்ற ரீதியில் ஆயுத ரீதியாகவும்,

[9ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட் - [1] தகுந்த ஒழுங்கில் தொகுக்கப்பட்ட ஸ்ரீ துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி | துதி [2] சகல கலாவல்லிமாலை மற்றும் பல பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-5097

நல்ல நிலையிலுள்ள Honda C G 125 விற்பனைக்குண்டு. தொடர்பு மகேந்திரன் ரேடிங் கம்பனி, இருபாலைச்சந்தி, கோப்பாய். C-5093

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதுமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு. M. G M, 777 K K. S. Road and 208, 1-st Cross st., Jaffna. ரெலிபோன்: 22611 (C-5066)

ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபன காரியாலயத்திற்கு முன்பாக உள்ள கடை நடத்தக் கூடிய கட்டிடங்களடங்கிய நாலுபரப்புகாணி விற்பனைக்குண்டு. விபரம் சி. பூபாலசிங்கம், கண்டிவீதி, ஆனையிறவு C-5081

பாவித்த நல்ல நிலையிலுள்ள AKAI GX 40 Audio Deck, Hitachi டெக்கும் விற்பனைக்கு உண்டு நேரில் எந்நேரமும் பார்வையிடலாம். கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். பாபு (Babu) 131, Kandy Road, Jaffna. C-5090

அரியாலை மேற்கு கலைமகள் வீதியில் (காந்தி சனசமூக நிலயத்துக்கருகில்) உள்ள காணி ஒன்றே கால் பரப்பு (1¼ உடன் விற்பனைக்குண்டு. விலை முழுவதும் 65 000/- தவணை முறையிலும் செலுத்தலாம். ஐ பொன்னுத்துரை, 19, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர், யாழ்நகர். A-1446

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரம்: க. சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

கரந்தன் சந்தியிலிருந்து கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் வழியில் 200யார் தூரத்தில் வீடுகட்டவும். தோட்டம் செய்யவும் வசதியான நன்னீர் கிணறுள்ள இரண்டு தோட்டக் காணிகள் விற்பனைக்குண்டு (7 பரப்பு, 10½ பரப்பு தொடர்பு கொள்ளவும்: 343, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். [C-5030]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5042]

## தேவை

மரக்கடைச்சல்வேலை தெரிந்த ஆண், பெண் இருபாலரும் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி அபிராமி மரவேலைத்தளம், 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாட்டுக்கு அருகாமையில்) C-5083

## தேவை

யாழ்: மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு நேரில்வரவும். தங்கநகரப்பிள்ளை அன் சன்ஸ் 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். C-5080

ஈழத்து படைப்பாளிகளின் இலக்கிய நூல்கள் கண்காட்சிக்கு வைப்பதற்கு தேவைப்படுகிறது. படைப்பாளிகள் எம்மிடம் தொடர்புகொண்டு முற்போக்கு எழுத்தாளர்கள் மாநாட்டில் வைப்பதற்கு ஒத்துழைப்பு தரவும். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். C 5017

மெழுகு திரியும், அப்பளமும் தயாரிப்பதற்கு ஆண்களும், பெண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ஸ்ரீ கிருஷ்ணாமில்ஸ், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 5033]

வீட்டுடன்தங்கிநின்று உதவி செய்யக்கூடிய கார்ச்சாரதி உடனடியாகத் தேவை. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ர இரத்தினசிங்கம், C/o M/s Jaffna Electricals, 6, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (C 5084)

## வாடகைக்கு

இருபாலைச்சந்தி - கோண்டாவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் வாடகைக்கு அல்லது கொமிஷன் அடிப்படையில் கொடுப்பதற்குண்டு. தொடர்பு: த. சிவபாதம், கோண்டாவில் வீதி, இருபாலை, கோப்பாய். C-5062

## வகுப்புகள்

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

9 மாத டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள், கேக் ஐசிங், சமையற்கலை தையற்கலை, பூவேலை, கைவேலை, கோலம், கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல். ஆங்கிலம், முதலுதவி வகுப்புக்கள். ஆரம்பம்: 15-10-86. Ladies' Academy (Regd), Victoria Road. Jaffna. (C 5067)

88ம் ஆண்டிற்கான G.A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தியடி. யாழ்ப்பாணம். [A 1424]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மணப்பந்தல்

இந்து வேளாள இனத்தைச் சேர்ந்த 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. சொந்தமாகக் கடை வைத்திருப்பவர் சீதனம் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். எச்சமயத்தவராயினும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் பல வகைப்பட்ட ஜாதகக் குறிப்புகள் எம்மிடம் உள்ளன கடித மூலம் தொடர்பு கொள்ளவும். எஸ். நாகேஸ்வரி, குளப்பிட்டி ரோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில் C-5089

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**கமலினி செல்வநாயகம்**

தோற்றம்:- 03-10-1980
மறைவு:- 09-09-1986

**நீங்காத நினைவுகள்**

கமலி — கமலி — கமலி
கமலி எனும் இளம்சிட்டு
நாளைய மலரும்மொட்டு
ஆள்பவன் செல் (ஷெல்) பட்டு
போயினளே உலகை விட்டு
ஆண்டவனின் பொறியதனால்
ஆறுமுகன் அவதரித்தான்
ஆள்பவனின் பொறியதிலே
ஆறுவயது பாலகி மரணிக்கிறாள்
ஆண்டவன் என்ன செய்வான் — பாவம்
அவனும் ஆள்பவனின்
''சென்றியில்''......
அகப்பட்ட கைதிதான்
நாம்என்னவிதிவிலக்கா?
நாளைய மரணங்கள்......
நமக்கும் விதிதான்.
பால்வடியும் பருவம்......
மேல்......
வடியும்இரத்தநிறம்......
என்பதாலா
இரத்த மதில்
நனையவிட்டான்......
காமாலைக்
கண்ணனுக்கு......
கண்டதெல்லாம்
மஞ்சள் நிறம்
பூமாலை சூடி(ய)வள்...
பூமலை சூடி... அவள்
பூரிக்கும் நேரமதை...
பூவுலகில்
பாமாலை பாடவைத்தான்
''கண்மணிக்காய்''
மூன்றடிமண்கேட்ட......
கண்ணனை
வணங்கியதால்......
மூன்றுபிடி மண்போட
வைத்தானே...பூவுலகில்
வாமனா! நீஎன்னவீமனா...
காதாயுதத்தால்
தடுப்பதற்கு... சோமனா
இயமனைக் காலினாலே
உதைப்பதற்கு
கமலி...... உன்பிரிவால்
நாம் மட்டுமா
அழுகின்றோம்?
கூடவே மாமரத்து
ஊஞ்சல் கயிறும்தான்
ஊஞ்சல் கயிற்றின்
ஒவ்வொரு ஊஞ்சல்களும்
கமலி...கமலி...கமலி
என்று அழைத்தவண்ணம்
இருக்கின்றன
உன்பிரிவால் துயருறும்
உடன்பிறவா சகோதரர்கள்
கமலி — கமலி — கமலி—

பெற்றோர், சகோதரர்கள்
(C-5092

## பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா: ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
5 வருட அனுபவத்துடன். வயது: 25-44 வரை

★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். உடன் பாஸ்போட். 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]

## பிரயாண ஒழுங்குகள்

## அவசர தேவை

★ சவுதி அரேபியா
(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
5 வருட அனுபவத்துடன்
வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

**உடன் பாஸ்போட், 20 படம்**

மற்றும்

**லைசென்ஸ்** முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்).

(A 1393)

உ
சிவமயம்

## சனீஸ்வர கிரகவழிபாடு

### நகுலேஸ்வரம், கீரிமலை

சரித்திர பிரசித்தி பெற்றதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்ததும் பல சக்கரவர்த்திகளினால் பூஜிக்கப்பெற்றதுமான ஸ்ரீ அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சனீஸ்வரப்பெருமானுக்கும் (நவக்கிரகங்களுக்கும்) 11 - 10 - 86 சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் விசேஷ சாந்திகள் ஹோமங்கள் நடைபெறும்.

குறிப்பாக: அச்சுவினி, பரணி, கார்த்திகை நட்சத்திரத்தில் உடையவர்களுக்கு 1987 மார்கழி மாதம் வரை அட்டமத்தில் சனி (8-ம் வீடு)

சித்திரை 3-ம் பாதம்; சுவாதி - விசாகம் 1-ம், 2-ம், 3-ம் பாதம் இவர்களுக்கு ஏழரைசனியும்

மூலம். பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் ஏழரைச்சனி முற்கூறும், விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை நட்சத்திரக்காரர்களுக்கும் நடுக்கூறும்.

நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்நட்சத்திர இராசிக்காரர்களும் முக்கியமாக சனீஸ்வரவழிபாடு செய்து தோஷ நிவர்த்திற்காக சங்கல்பித்து சண்டகி தீர்த்தமாடி எள்தீபமேற்றி நவக்கிரக சனீஸ்வர வழிபாடு செய்து எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின்கிருபாகடாக்ஷத்தை பெற்றுய்வீர்களாகுக.

இங்ஙனம்,
க நகுலேஸ்வரசிவாச்சாரியர்,
ஷ கோயில் ஆதீனகர்த்தா.

நகுலேஸ்வரம், கீரிமலை. C-5098

# பங்களாதேஷில் சிட்டாகொங் மலைப்பகுதியில் மனித உரிமை மீறல்கள்!

## சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை

லண்டன், அக் 8

**பங்களாதேஷின் சிட்டாகொங் மலைப்பிரதேசத்தில் பெருமளவு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. இம்மலைப் பிராந்தியத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பழங்குடிகள் பங்களாதேஷ் இராணுவத்தினரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது.**

சிட்டாகொங் மலைப்பகுதி இயற்கை வளம் நிறைந்ததாகும். இங்கு பங்களாதேஷ் அரசு புதிய குடியிருப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. இக் குடியிருப்புக்களைத் தடுக்கும் சிட்டாக்கொங் மலைவாசி மக்கள்மீதே அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

முஸ்லிம் மக்களையே பங்களாதேஷ் அரசு இந்த மலைப் பிராந்தியத்தில் குடியமர்த்தி வருகின்றது ஆனல் இங்குள்ள மலைவாழ் மக்கள் இஸ்லாமிய மதத்தைச் சாராதவர்கள் இவர்களில் பலர் பௌத்தர்கள் என்று அறியப்பட்டுள்ளது.

இவர்கள் 'சான்டிபாகினி' என்ற பெயருடன் இயக்கம் அமைத்து புதிய குடியிருப்புக்களைத் தடுத்துவருகின்றனர். பங்களாதேஷ் இராணுவம், புதிய குடியிருப்பாளர்களுடன் சேர்ந்து இந்த மலைவாழ் பழங்குடி மக்களைத் தாக்கி வருகின்றது.

இத்தாக்குதலின்போது ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் பல பெண்கள் சற்பழிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகளும் சூறையாடப்பட்டுள்ளன.

பௌத்த ஆலயமொன்றும் தீயிடப்பட்டு அங்கிருந்த மதகுரு ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 10 வருடகாலமாக சிட்டாக்கொங் மலைப்பிராந்தியம் இந்தக் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை பிரிட்டனிலுள்ள பாகிஸ்தான் ஸ்தானிகர் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார் சிட்டாகொங்கில் கிளர்ச்சியாளர்களையே தமது படைகள் முறியடித்து வருவதாக அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## ஐஸ்லாந்து சந்திப்பு பயனளிக்கும்!

நியுயோர்க், அக் 8

''ஐஸ்லாந்தில் இடம்பெறவுள்ள அமெரிக்க அதிபர் றீகன், சோவியத் அதிபர் கோபச்சேவ் ஆகியோருக்கு மிடையிலான சந்திப்பு பயனுள்ளதாக அமையும்'' என்று சோவியத் பிரதி வெளிநாட்டமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ. நா. சபைப் பொதுக் கூட்டத்துக்கு தமது பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்கிய சோவியத் பிரதி வெளிநாட்டமைச்சர் திரு விலாஜிமிர் பிறிக்ரொக்ஸி நியுயோர்க் வந்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது: ''அணுஆயுதப் பரிசோதனைத் தடை ஐரோப்பாவில் அணுசக்தி ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துதல் என்பன தொடர்பாகவும் ஆப்கானிஸ்தான்,

(7-ம்பக்கம் பார்க்க)

## றெய்க்ஜாவிக் சந்திப்பு:

## "எதுவும் அதிகம் எதிர்பார்ப்பதற்கு இல்லை"

### — றீகன்

வாஷிங்டன், அக் 8

''அடுத்த வாரம் ஐஸ்லாந்தின் தலைநகரான றெய்க்ஜாவிக்கில் இடம்பெறவுள்ள சோவியத் அதிபர் கோபச்சேவுடனன தமது சந்திப்பில் எதனையும் அதிகம் எதிர்பார்க்க முடியாது'' என்று அமெரிக்க அதிபர் றொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

றெய்க்ஜவிக் சந்திப்பு ஒரு சாதாரணமானதாக இருக்குமென்றும் இதில் ஆக்கபூர்வமான முடிவுகளை எதிர்பார்க்க முடியாதெனவும் திரு றீகன் மேலும் தெரிவித்தார்.

''இச்சந்திப்பு எந்தவிதத்திலும் உடன்படிக்கைகளை உருவாக்குமொன்ருக அமையமாட்டாது. ஆனல் போர் ஒன்றைத் தவிர்ப்பதற்கான பயனுள்ள சந்திப்பாக இது அமையலாம்'' என்று திரு றீகன் தொடர்ந்து தெரிவித்தார்.

இம்மாதம் 11ம், 12ம் திகதிகளில் றீன், கோபச்சேவ் சந்திப்பு ஐஸ்லாந்தின் தலைநகரான றெய்க்கோவுக்கில் இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காஸ்பரோவ் உலக சதுரங்க சாம்பியன்

லெனிகிரேட், அக். 8

உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை சோவியத் வீரரான காரி காஸ்பரோவ் இரண்டாவது தடவையாகப் பெற்றுள்ளார்.

காஸ்பரோவ் தமது சகநாட்டவரான அனட்டோலி சார்ப்போவை இந்த உலக சதுரங்கப் பந்தயத்தில் தோற்கடித்தார்.

23 வயதான காரி காஸ்பரோவ் 24-வது பந்தையத்தின் 32-வது நகர்விலேயே தமது வெற்றியைப் பெற்றுக்கொண்டார் இதனையடுத்து இவர் 12 புள்ளிகளையும், கார்ப் 11 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு நவம்பரில் முன்னள் உலக சாம்பியனை அனட்டோலி கார்ப்போயிடமிருந்து உலக சாம்பியன் பட்டத்தை முதற்தடவையாகச் சுவீகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்

★ பிரான்ஸ் ★ ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A-1391]


## எரிகுண்டிலிருந்து பாதுகாப்பு:


## மக்னீசியம், தேமைற் குண்டுகள் விழுந்தால் செய்யவேண்டியவை

தீப்பற்றியது தெரிந்தவுடன், எதிரியின் தாக்குதல்கள் மேலும் தொடரவில்லை என்பதை நிச்சயித்துக்கொண்டு உடனடியாக அவ்விடத்தை அணுகுங்கள். தீயானது அப்பொழுதான் பரவ ஆரம்பிக்கிறதென்றல் உங்களால் முடிந்தளவு மணல், நீர் கொண்டு அதனை அணைக்க முயலுங்கள். நீரினைப்பாய்ச்சுவதற்காக எளிய நீரிறைக்கும் கருவியைப் பயன்படுத்தலாம். இவ்வகை கருவி மிக மலிவாகத் தயாரிக்கப்படக்கூடியது. குழாய் நீர் வசதி இல்லாத இடங்களிலும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடியது. எனவே இதனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். ஆனல் உங்கள் வசதிக்கேற்ற வகையில் எவ்வகையான கருவியையும் நீங்கள் பயன்படுத்தலாம் சூழவுள்ள தீயை ஓரளவு கட்டுப்படுத்த முடிகிறபோது அத்தீக்குக் காரணமான எரியூட்டும் குண்டினை அணுக முயற்சி செய்யுங்கள். பின்பு அதனை மணல் அல்லது நீர் மூலம் கட்டுப்படுத்தும் செயல்களை மேற்கொள்ளுங்கள் எரியூட்டும் குண்டையோ அல்லது அதன்மூலம் பரவியதீயினல் எரிந்து கொண்டிருக்கும் வேறு பொருட்களையோ நீர் கொண்டு அணைக்க வேண்டுமாயின் இந்விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும்.

லால் மூடி, சிறுசிறு துளிகள் பரவலாக வரக்கூடியவாறு பிடித்து குண்டின்மேல் சிறிது சிறிதாக விசிற வேண்டும். அவ்வாறு விசிறுவதன்மூலம் 10 அல்லது 15 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாக எரியக்கூடிய மக்னீசியம் போன்றவற்றை 1 அல்லது 2 நிமிடங்களுக்குள்ளேயே எரிந்து முடிக்கச் செய்வதால் தீ பரவும் அபாயத்தை மிகவும் குறைக்கலாம்.

இச்சந்தப்பத்திலும் அவ்வகைக்குண்டின் மேல் வாளியாலோ அல்லது குடம் போன்ற பாத்திரங்களாலோ நீரை வீசுதலும் நிச்சயமாகத் தவிர்க்கப்படல் படவேண்டும். பொதுவாக இவ்வகைக்குண்டு ஒன்றை அணைப்பதற்கு 6 கலன் நீர் போதுமானது எரியூட்டும் குண்டு ஒன்றினது தீயை அணைப்பதற்கு இரசாயன தீயணைப்புக் கருவிகளை ஒரு போதும்பயன்படுத்தாதீர்கள். குண்டிலிருந்து பரவிய தீ வேறுயாசேனும் பொருட்களில் பரவிருநதால் அவற்றை அணைப்பதற்கு வேண்டுமானல்இக்கருவிகளைப்பயன் படுத்தலாம்.

எரியூட்டும் குண்டொன்று விசப்பட்டு தீ பற்றியுள்ளதாயின் குண்டின் தீயையா அல்லது பரவிக் கொண்டிருக்கும் தீயையா முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு



1) மரத்தாலான அல்லது யாதேனும் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களில் தீப்பற்றி இருப்பின் அதன்மேல் பாய்ச்சப்படும் நீரானது வேகமான தாரை வடிவில் நேரடியாக பாய்ச்சப்படலாம்.

2) ஆனல் தீயினைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும் எரியூட்டும் குண்டு ஒன்றினது தீயை அணைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ வேண்டுமாயின் தொடர்ந்து உறுதியான நீர்த்தாரை ஒன்றை எச்சர்ந்தப்பத்திலும் அதன்மேல் பாய்ச்சக்கூடாது. அப்படிப் பாய்ச்சுவீர்களேயாயின் தீயை அணைக்க முடியாமல் போவதோடு அநேகமாக வெடித்தலை ஏற்படுத்திவிடுவீர்கள் இது உங்களுக்கும் ஆபத்தாய் முடிவதோடு பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்திவிடலாம் எனவே இவ்வகையான சந்தர்ப்பங்களில் எரியூட்டும் குண்டு ஒன்றினது தீயை அணைக்க வேண்டுமாயின் நீர்க்குழாயின் வாய்ப்பகுதியை உங்கள் விர

வரவேண்டுமென்பதற்கு நியதி எதுவும் கிடையாது. அது அச்சர்ப்பத்தைப் பொறுத்து எதனை உடனடியாக அணைக்காவிடின் கூடியளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக்கருத்திற் கொண்டே செயலாற்ற வேண்டும் எது எவ்வகையாயிருப்பினும் தீயானது எமது கட்டுப்பாட்டை மீறுதிருக்குமாறு பார்த்துக் கொள்வதே முக்கியமானதாகும். மாடிக் கட்டிடமொன்றின் மேற்பகுதியிலோ அல்லது கூரையிலோ இவ்வகைக்குண்டு ஒன்று விழுந்து எரிந்து கொண்டிருந்தால், உடனடியாக அக்குண்டினல் வெளிப்படும் தீயையே அணைக்க முயலவேண்டும். இல்லாவிடின் அது வெளிவிடும் வெப்பத்தினல் விழுந்திருக்கும் தரைப்பகுதியைத் துளைத்து அதன் கீழ் இருக்கும் அடுத்த மாடிக்கும் தீயைப் பரவச் செய்துவிடும். எச்சந்தர்ப்பத்திலும் எரியூட்டும் குண்டு ஒன்றினது மக்னீ

[7ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

அறியாமை ஆண்டவனின் சாபம்; அறிவோ விண்ணை நோக்கி நாம் பறக்கும் இறக்கை.

— ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## முல்லைக்கிண்ணம்

"கல்விக்குப்பயன் அறிவு; அறிவுக்குப்பயன் ஒழுக்கம்" என்ற உண்மையை வற்புறுத்துவதே நவராத்திரி விழாவின் பெரு நோக்கம்.

இதற்கு உரித்தான செய்தி ஒன்று எங்கள் பத்திரிகையில் அண்மையில் வெளிவந்தது அது வாசகர்களை நிச்சயம் கவர்ந்திருக்கும்.

''முல்லைக்கிண்ணம் ஆசிரியர் சின்னம்'' என்ற தலையங்கத்தின் கவர்ச்சி அதில் காணப்படும் எதுகையால் மட்டுமல்ல பத்திரிகைகள் புலவர்கள்போல் எதுகை மோனையில் ஈடுபடுவது சாதாரணம்; ஆனால் அவ்வித ஈடுபாடு சொற்சுவை மட்டுமல்ல பொருட்சுவை கொண்டிருக்கவேண்டும்

''முல்லைக்கிண்ணம்'' என்பதில் கமழும் நறுமணம், 'ஆசிரியர் சின்னம்' என்பதில் பரந்து வீசுகிறது.

'வன்னி நாகரிகம்' என்ற தனித்துவப்பண்பாடு இலங்கைச் சரித்திரத்தின் புராதன காலம் தொட்டு தனிமரபுடையதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆங்கிலமும், ஆங்கிலேயரின் ஆட்சியும் இப்பிரதேசத்தையும் இங்கு வாழ்ந்த பெருங்குடி மக்களையும் பின்தங்கிய நிலைக்கு மட்டந்தட்டின

''படிக்கும் திறமையுடையவர்கள் படிக்கட்டும் ஏனையோர் கமம்'' இவ்வாறு வெட்டொன்று துண்டு இரண்டு என்ற போக்கு கல்வி பற்றி இருந்தகாலத்தில் 'முல்லைத்தீவு ஹவுஸ்' என்றொரு பிரிவு யாழ். இந்துக் கல்லூரி விடுதிச்சாலையில் பிரபலம் பெற்றிருந்தது இன்று இது நினைவுக்கு வருவது இயல்பு

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு உயர் ஆங்கிலக் கல்வி தேடி வந்த மாணவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக இருந்தமையால் அவர்களுக்கொரு பிரத்தியேக அமைப்பு.

இக் கல்லூரியைப் பொறுத்தளவில் அன்னம் பாலித்த அந்த விடுதிச்சாலைக்கு அரிசி தட்டுப்பாடுள்ள காலத்தில் 'முல்லைத்தீவு ஹவுஸ்' என்றும் உதவ முன்வந்திருந்தது. கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் உள்ள தொடர்புக்கு இக்குழுவினர் முன்மாதிரியாக இருந்தனர்

இன்று கல்விக்கும் கமத்துக்கும், கல்விக்கும் தொழிலுக்கும் எவ்வித முரண்பாடில்லையென்பதோடு உழவுக்கும் தொழிலுக்கும், உயர்கல்வியும், தொழில் நுட்பமும் அத்தியாவசியமாகிவிட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தொன்மையையும், அதன் இன்றைய அமைப்பில் உண்டான தொல்லைகளையும், அங்கு அரச அதிபராகஇருந்த, இன்றும் அதன் வருங்காலத்தில் அபிமானங்கொண்ட நா. மாணிக்கஇடைக்காடர் எங்கள் கடந்த வாரமலரில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இன்றைய முல்லைத்தீவு மூன்று மாவட்டங்களிலிருந்து சேர்க்கப்பட்ட ஒரு புதிய மாவட்டம். இது அபிவிருத்திக்கு இன்றியமையாத மக்கள் ஒற்றுமை என்ற பண்பை இலகுவில் பெறமாட்டாது; அதுவும், மக்கள் அனைவரும் தமிழர்களாக இருந்தால் ஒன்றுபடுவது சாதாரணமோ சுலபமோவல்ல. ஆனால் இன்றைய நெருக்கடியில் அற்புதம் நிகழும்.

போர்க்களமாக இயங்கி வரும் இப்பகுதிகள் காடாகக் காட்சியளிப்பது இயல்பு. காட்டை நாடாக்கும் முழுப் பொறுப்பு சிவில் ஆட்சித் தலைவரான அரச அதிபருக்கே உண்டு.

இன்றைய நிலைமையை நன்கு புரிந்துகொண்டிருக்கும் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் எடுத்துவரும் பிரயத்தனங்களில் கல்வி முன்னுரிமை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுவே இன்று நடைபெறும் கால்பந்தாட்டச் சாம்பியன் போட்டியின் இரகசியம். முதலிடம்பெறும் பாடசாலைக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணம், 'ஆசிரியர் சின்னம்' என்பதன் அர்த்தம் ஆழமானது; இருப்பினும் நவராத்திரி காலத்தில் இதனை அளவிடுவது அவ்வளவு கடினமல்ல.

'எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக' என்று அழைத்திடும் தெய்வம் அறிவுத் தெய்வமன்றோ?

வீதிதோறும் கலையின் ஒளி திகழவேண்டும் வீதிதோறும் இரண்டொரு கல்லூரி இலங்கவேண்டும் நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்கவேண்டும்; இவ்வாறு அறியாமையை ஒழிக்க வல்லவர்கள் ஆசிரியர்களே!

இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாக உள்ளதே முல்லைக்கிண்ணம். வேகமாக வளர்ச்சியடையவேண்டிய இம்மாவட்டத்திற்கு இது உற்சாகமூட்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம், கிழக்கிலங்கையில் ஆங்கிலமூலம் பயிலும் தனித்துவ பல்கலைக்கழகம். இதேபோன்று வன்னி நாட்டில் எதிர்காலத்தின் உருவாகவேண்டிய 'குளக்கோட்டானுக்கும் பண்டாரவன்னியனுக்கும்' விவசாயப் பல்கலைக்கழகம் மிக அவசியம்.

இன்று முல்லைத்தீவு காணும வைபவம், ஆசிரிய குழாத்தின் தலைமைத்துவத்தை விளக்குகிறது. அதன்மூலம் காடு நாடாகவும், நாடு நகராகவும் வழி பிறக்கும்.

## பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், வியாழன் வண். நாவலர் பாடசாலையில் பிரதேச பண்டித பால பண்டித வகுப்புக்கள் விஜய தசமி 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகின்றன. [ப]

### வ. பி. போ. ச.வின் கட்டண உயர்வு——

# 'தனியார் வாகனங்களிலும் பார்க்க குறைவானதாகும்'

யாழ்ப்பாணம், வியாழன்.

''வ பி போ. சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டண அதிகரிப்பு எப்பாதையிலாவது தனியார் வாகனங்களினால் அறவிடப்பட்ட கட்டணத்திலும் பார்க்கக் குறைவானதாகும்.''

இவ்வாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு சி. கனகரத்தினம், வடபிராந்திய போக்குவரத்துச் சபைக் கட்டண உயர்வு குறித்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மூடப்பட்ட 9 பிராந்திய சபைகளும் தனிமையாகத் தனித்துவத்துடன் இயங்குவதற்கு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது இந்த நடைமுறைப் பகிர்வினால் ஒவ்வொரு பிராந்திய சபைகளும் சுயவருமானத்திலிருந்தே சபையின் செலவினங்களை ஈடுசெய்யவேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைப் பொறுத்தமட்டில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளால் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களிலும் கூடுதலான செலவுகளை எதிர்கொள்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. செலவினங்களுக்கு முக்கியமான காரணிகளுள் ஒன்றாகிய எரிபொருள் பெறுவது சம்பந்தமான நிலைமையைவிளக்குவது பொருத்தமானதொன்றாகும் வடபிராந்தியத்தில் எமது நிறுவனத்திற்கு எரிபொருளை கட்டுப்பாட்டு விலையில் வழங்கிக்கொண்டிருந்த பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திலிருந்து தற்போது எம்மால் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வேறு பிராந்தியங்களிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களில்கூட எம்மால் எரிபொருளைப் பெற அனுமதிக்கப்படவில்லை. இதனால் வேறு பிராந்தியங்களிலுள்ள தனியார் எரிபொருள் வழங்கும் நிலையங்களிலிருந்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் சபையின் லொறிகள்மூலம் எமது ஊழியர்களை ஈடுபடுத்தித் தற்பொழுது எரிபொருள் பெற்று ஓரளவு சேவையை இப்பகுதி மக்களுக்கு வழங்க முடிகின்றது.

வ.பி.போ. சபைக்கு ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடி காரணமாகக் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் தங்களது மாதாந்த சம்பளத்தையே உரிய திகதியில் பெறமுடியாமல் மனவிரக்தி காரணமாக வேலை நிறுத்தம்செய்துள்ளதை பொதுமக்கள் அறிவார்கள். எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளால் அழிவைநோக்கி முன்னேறிய வ.பி.போ. சபையைப் புனருத்தாரணம்செய்து இச்சபை தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையை வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மிகுந்த கவனத்தின் மத்தியில் சில நடவடிக்கைகள் எம்மால் கட்டாயமாக எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பல வழிகளில் கஷ்டப்படுகின்ற எமதுமக்களுக்குக் கூடிய பளுவை ஏற்றாமல் மிகச்சிறிய தொகையைக் கூட்டி சில சில பாதைகளில் மட்டும் கிமீற்றருக்கு -/15 சதம் அறவிடுவதற்கு வ.பி போ சபை தீர்மானித்து நடவடிக்கை எடுத்தது இக்கட்டண மாற்றம் வ.பி போ. சபையினால் செயலாற்றப்படுகின்ற குறைந்த கட்டணத்தையுடைய பாதைகளுக்கு மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது கட்டணம் அதிகரிக்கப்பட்ட பாதைகள் கீழ் வருமாறு:-

1. யாழ்ப்பாணம் - வவனியா.
2. யாழ்ப்பாணம்-பருத்தித்துறை.
3. யாழ்ப்பாணம்-கீரிமலை (787).
4. யாழ்ப்பாணம்-காரைநகர்.
5. யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை (780.
6. முல்லைத்தீவு - வவனியா.
7. வவனியா - மன்னார்.
8. மன்னார் - அநுராதபுரம்.

இந்நடவடிக்கையினால் பெறப்படுகின்ற தொகை மிக மிகச் சிறியதாகும். இச்சிறிய அதிகரிப்பைக் கொண்டு உதிரிப்பாகங்களுக்காகச் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிற்பாட்டப்பட்டுள்ள பஸ் வண்டிகளுக்கு உதிரிப்பாகங்களைக் கொள்வனவுசெய்து அவைகளைச் சேவையில் ஈடுபடுத்த முடியும். எம்முன்னேற்றம் சிறிதாக இருந்தபோதும், படிப்படியாகவ பி போ. சபையின் சேவைகளை முன்னேற்ற முடியும் என்பதும், மக்களுக்குத் தொடர்ச்சியான சிறநத சேவையினை அளிக்க முடியும் என்பதும் எமது நம்பிக்கை

(8ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## கட்டணம் இறங்காதோ!

தற்போது யாழ். மாவட்டத்துக்கு எரிபொருள் குறிப்பிட்ட நியாயவிலையில்கிடைக்கச் செய்யப்பட்டுவரும் இவ்வேளையில் தனியார் பஸ்களில் அறவிடப்படும் கட்டணங்களிலும் இறக்கம் ஏற்படவில்லை. இதுபற்றி உரிய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களினால் மேற்கொள்ளப்படல் அவசியம்.

கட்டணங்களை அறவிடுதலில் ஒரு சீரான முறையைக் கைக்கொள்ளல்வேண்டும். மார்க்கத்தின் தன்மை, வீதியின் தன்மை, பிரயாணிகளின் எண்ணிக்கை போன்றவற்றைக் கவனித்து கட்டணம் நிர்ணயிக்கப்படல்வேண்டும்.

மனிதன் பிரயாணிகளைத் துன்புறுத்தாமல் எப்படி, எத்தனை ஏற்றிச் செல்லவேண்டும் என்று சட்டம் ஆக்கினான் ஆனால் பிரயாணிகளாகிய நாம் எப்படி நடத்தப்படுகின்றோம் என்பதை உணரவேண்டும். பிரயாணிகளும் பொறுப்புடன், ஆபத்துக்கும், விபத்துக்களுக்கும் உள்ளாகாமல் இருக்க உணர்ந்து பிரயாணம் செய்யப் பழகவேண்டும் காத்துநின்று மற்றைய வாகனத்தில் செல்லப்பொறுமை கொண்டிருக்கவும் வேண்டும்.

—பிரயாணி

## தூயவள் சக்தி

மங்கள நாயகி ராஜரா ஜேஸ்வரி
சிந்தையில் நிறைந்திடும் செந்தமிழ் ரூபிணி
அங்கயற் கண்ணி அம்மையே உன்னை
வந்தனை செய்து வளம்பெறு வோமே

ஆராத அன்புடன் உன்புகழ் பாடினால்
தீராத குறைகளைத் தீர்த்திடும் தாரணி
உத்தமி உலகினைக் காத்திடும் ரட்சகி
வெற்றியை யாவர்க்கும் வழங்கிடும் வித்தகி

உனதருள் வேண்டியே நிதமுனைப் பணிபவர்
மனஇருள் நீங்கியே திருவடி காட்டுவாய்
தனமுடன் வீரமும் கல்வியும் சேர்ந்து
தினமுனைத் தொழுதிடும் பக்தருக் கருளுவாய்.

— காந்திமதி

## சக்தியின் பெருமை

### ஸ்ரீ மந்திர மாதிருகா புஷ்பமாலாஸ்தவம்

ஹ(அ)ஞ்சமு நயந்து பயிலுமென் னடையாய்
ஏற்றருள் ஆருமுஞ் சுடர்விட்
டுஞ்சலின் எறிக்கும் வச்சிர மலிந்த ஒண்பொனி
னங்கதம் கடகம்
அஞ்சலில் சிலம்பும் அரதனக் குழையும்
இளம்மதி புனைமணி முடியும்
கஞ்சமென் கரத்தங் குலியமுங் காஞ்சி
கங்கணம் மூக்கணி யிவையே.

பொருள்: அன்னமும் விரும்பிப் பழக ஆசைகொள்ளும் அழகிய மென்னடையாளே! முத்துமாலை அசையும் ஊஞ்சலின் கயிறு ஒரு நிலை நில்லாது விட்டு விட்டுத் தன்னிலைக்கு வழிவதுபோல, விட்டுவிட்டு ஒளிவீசும் வயிர இரத்தினம் பல பதித்து சிறந்த பொன்னினாற் செய்யப்பெற்ற தோணி காப்பு குறைவு எதுவுமின்றிச் செய்யப்பெற்ற சிலம்பு, இரத்தின குண்டலம், பிறைச் சந்திரனைச் சூடிய மணி முடி, தாமரை மலரையொத்த மென்மையான கையில் அணியும் மோதிரம், இடையணியாகிய எண்கோவை மணிவடம், காப்புநாண், மூக்குத்தி முதலிய இவ்வாபரணங்களை ஏற்று அருள்வாயாக.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

# "ஆங்கிலம் கற்பது அத்தியாவசியமானது"

பருத்தித்துறை, புதன் ''விரைவாக மாறிவரும் இன்றைய விஞ்ஞான யுகத்தில மனிதன முழுமையான அறிவைப பெறறுக்கொள்ள ஆங்கிலக் கல்வி மிகமுக்கியத்துவம வாய்ந்ததாக இருக்கின்றது எனவே எமது இளைஞர் யுவதிகள் முழுமையான அறிவைபபெற்று பூரணமனிதனுகி வாழ்க்கையில வெற்றியடைய ஆங்கிலக் கல்வியை நன்கு கற்றுக்கொள்ளவேண்டும்.'' இவ்வாறு தென்புலோலி கிழக்கு பிரஜைகள் குழுவினுல் ஆரம்பிக்கப்பட்ட இலவச ஆங்கில பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ. கல்வித் திணைக்கள விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எஸ். செல்லத்துரை குறிப்பிட்டார்.

புற்றளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இப்பயிற்சி நெறி ஆரம்ப வைபவத்திற்கு பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். வயிரமுத்து தலைமை தாங்கினர்.

விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு செல்லத்துரை மேலும் குறிப்பிடுகையில,

''மாணவர்கள் பாடசாலையில் கற்கும் ஆங்கிலக் கல்வியறிவு போதியதாக இல்லை. அரசாங்கம் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்து முகமாக மேற்

(6ம் பக்கம் பார்க்க)

## நான் உரிய காலத்திலேயே தடுப்பு மருந்தைக் கொடுத்திருந்தால்... இக் கதி அவனுக்கு ஏற்பட்டிராதே!





சிறு பராயத்தில் ஏற்படும் பயங்கர போலியோ நோயானது உங்கள் பிள்ளைகளை அங்கவீனர்களாக்கி அவர்களுக்கு மரணத்தைக் கூட உண்டுபண்ணக் கூடியது. பெற்றோர் என்ற முறையில் நீங்கள் இப் பயங்கர போலியோ நோயிலிருந்து உங்கள் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள ஒரே வழி — உரிய காலத்திலேயே அவர்களுக்குத் தடுப்பு மருந்தைக் கொடுப்பதாகும்.

சிறந்த உடல் நலமும் பெற்றோரின் பராமரிப்பும் ஒவ்வொரு பிள்ளையினதும் பிறப்புரிமை. அதை உங்களால் மாத்திரமே அவர்களுக்கு அளிக்க முடியும்.

உங்கள் வைத்தியருடன் அல்லது அருகிலுள்ள வைத்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆறு சிறுவர் நோய்களும் அவற்றுக்கெதிரான தடுப்பு மருந்தேற்றல் அட்டவணையும்

| எப்பொழுது? | என்ன? | ஏன்? |
|---|---|---|
| குழந்தைகளுக்கு<br>பிறந்ததும் | பீ. சி. ஜி. ஊசி மருந்து | காச நோயிலிருந்து பாதுகாக்க |
| 3 ஆம் மாதம் | முக்கூட்டு (டி. பி. ரி) ஊசி மருந்து (1)<br>போலியோ மருந்து (1) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க,<br>இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க. |
| 5 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (2)<br>போலியோ மருந்து (2) | ,,<br>,, |
| 7 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (3)<br>போலியோ மருந்து (3) | ,,<br>,, |
| 9 ஆம் மாதம் | சின்னமுத்து ஊசி மருந்து | சின்னமுத்திலிருந்து பாதுகாக்க |
| 18 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (4)<br>போலியோ மருந்து (4) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகர்க்க<br>இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க |
| கர்ப்பிணித் தாய்மாருக்கு: | | |
| கர்ப்பம் தரித்து 12 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (1) | பிறக்கும் குழந்தையையும் தாயையும் ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க. |
| முதல் மருந்து ஏற்றி 6 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (2) | |

கவனிக்க: இந்நோய்களுக்கு திரான முழுமையான தடுப்புச் சக்தியைப் பெற, இம் மருந்துகளை அட்டவணையிற் குறிப்பிட்டபடி, உரிய காலத்தில் இடை நிறுத்தாது தொடர்ந்து கொடுத்தல் அவசியம்.

**துரித தடுப்பு மருந்தேற்றும் தேசிய இயக்கம்**
சுகாதார அமைச்சு
யுனிசெப்

**உங்கள் பிள்ளைக்கும் தடுப்பு மருந்தை இன்றே கொடுங்கள். தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்.**

# மாற்றலாகிச் செல்லும் பங்குத்தந்தை

வாழ்ந்த பின் சரித்திரம் படைத்தவர்கள் பலர். வாழும் போதே சரித்திரம் படைப்பவர்கள் சிலர். எம் பங்கில் பணியாற்றி எம் இதயங்களில் நீங்கா இடம் பிடித்த எம் பங்குத்தந்தையாக இருந்து மாற்றலாகிச் செல்லும் அருட் திரு அருமைநாயகம் அடிகளாரும் அவர்களில் ஒருவரே.

யாழ். அடைக்கல அன்னையின் மடியில் ஐந்து ஆண்டுகள் தவழ்ந்து, அழகுடன் அவள் ஆலயம் மிளிரச் செய்து அவள் அன்புக்கு சான்ருய். அன்னையின் பக்தியில் மணிமுடியாய் நின்று, மாசறு மைந்தனுய், மாண்புறு குருவாய் திகழ்ந்திட்ட எம் தந்தை தம் பணியை எம் பங்கில் ஆற்றி விட்டு எம்மைப் பிரிந்து தன் புதிய பணியை ஆற்றச் சென்றிடும் வேளையில் அவர் தம் பணி சிறந்திட எம் இதயம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேம்.

தன் துறவற வாழ்வில் ஏழு ஆண்டுகள் பணியாற்றிய அவர் அதிலும், ஐந்து ஆண்டுகள் யாழ் அடைக்கல அன்னையின் பங்கிலேயே தன் பணியாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், திருச்சபை வரலாற்றிலே பிரசித்தி பெற்றதும் வேத விசுவாசம் வளர காரணமானதுமான யாழ் அடைக்கல அன்னை ஆலயம் மிகவும் சிறப்புக்குரியதும் யாழ் நகரிலேயே மிகப் பெரிய ஆலயங்களில் ஒன்ருகவும் விளங்குகின்றது. இப் பாரிய பங்கைத் திறமையாகவும், சிறப்புடனும் வழிநடத்திய பெருமை இத்தனை நாளும் பங்குத் தந்தையாய் இருந்த அருட் திரு. அருமைநாயகம் அடிகளையே சாரும் வயதில் சிறியவராயினும் இப் பாரிய பங்கை பொறுப்பேற்று சிறந்த முறையில் தன் கடமையைச் செய்தார். பொருள் செறிந்த, கருத்தாழமிக்க ஞான உரைகள் மூலம் மக்களை நல் முறையில் கவர்ந்து இறை பக்தியில் வளரச் செய்தார்.

அவரால் நாம் அடைந்த பலன்கள் பல, அவர் நமக்காற்றிய பணிகள் பல, நாம் பெற்ற இப் பயன்கள் மற்றவர்களுக்கும் கிடைத்தல் நலமே அவருடைய பரந்த அறிவும் விவேகமான செயல்களும் ''பங்கு'' என்ற எல்லைக்குள் அடங்காது எல்லா மக்களுக்கும் கிடைப்பதையிட்டுப் பெருமையடைகிறேம்.

அவருடைய பணி ''பாதுகாவலன்'' பத்திரிகையூடாக அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை பங்கின் பணிகளின் மத்தியிலும் கடந்த ஒரு வருடகாலமாக ''புதிய உலகம்'' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து தன் புரட்சியான கருத்துக்கள் மூலம் புதுமையான மாற்றத்தை எம் சமூகத்தில் உருவாக்கிவரும் ஆசிரியர் வாசக இதயங்களில் நீங்கா இடம் கொண்டுள்ளார் என்பதிலும் ஐயமில்லை.

வனிதா பூவிலிங்கம்

## ஆங்கிலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் நடவடிக்கைகளை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை கிராமங்கள் தோறும் இயங்கும் பொது சேவை நிறுவனங்களும் இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது பாராட்டப்பட வேண்டியதாகும்'' என்ருர்.

உடுப்பிட்டி கல்வியதிகாரி திரு.பீ.சச்சிதானந்தம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு பீ.பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள். பிரஜைகள் குழு உறுப்பினர் திரு.ஆறுமுகம் நன்றி கூறினர். (எ)

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
கிழமை: வியாழன்
திகதி: 23 (9-10-86)
திதி: ஷஷ்டி பி. ப வரை
நக்ஷத்திரம்: கேட்டை காலை 7-08ன் மேல் மூலம்.

**மேடம்:** இதயத்தில் ஏக்கம் இன்று தணியும் பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சி தரும் பரோபகாரச் சிந்தை மேலிடும்.

**இடபம்:** சிந்தனையின் தாக்குதலால் உடல் நலம் பாதிக்கப்படலாம். இன்று புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்.

**மிதுனம்:** தேனை வாழ்வும் உண்டு. இசைத்துறையில் ஞானம் ஏற்படும். நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதியும் மாலையிட்டு வரவேற்கும்

**கடகம்:** அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித் தரும் ஆணவப்போக்கு மற்றவர்களின் முறிவைத் தேடித் தரும். விஷபயத்திற்குமிடமேற்படலாம்

**சிங்கம்:** புதிய உறவுமுறைகளில் மகிழ்ச்சியடைவீர்கள். இதயம் பூரிப்பில் விம்மும் நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம்.

**கன்னி:** நிரந்தர வாழ்வும் மலரும். நினைத்தது யாவும் பலிக்கும். தொழில் நிலைமையும் நன்மைபெறும.

**துலாம்:** பரம்பொருளின் அருளும் கிட்டும். கடந்த சில நாட்களாக தொல்லை கொடுத்த கடன் இன்று தீரும். மன நிறைவும் உண்டாம்.

**விருச்சிகம்:** விபரீதங்கள் விளையக்கூடும். தனியார் துறையில் நஷ்டமேற்படும். எதிர்பாராதவகையில் பண விரயமும் உண்டாம்.

**தனுசு:** அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும் விருந்தினர் வருகை மகிழ்ச்சிதரும். பிறருக்கு உதவுவதில் முன்னணியில் நிற்பீர்கள்.

**மகரம்:** நான் என்ற அகம்பாவம் தலைதூக்கும். தொழில் துறையில் சிரமம் தோன்றும் எதிலும் தயக்கநிலை தோன்றி மறையும்.

**கும்பம்:** அடக்கமான நடவடிக்கையின்மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள் தாய்வழியாலும் தனதானிய விருத்திக்குமிடமுண்டாம். தொழிலும் விருத்தி பெறும்.

**மீனம்:** எதிர்ப்புக்கள் மறையும். திடீர் பிரயாணமும் ஏற்படலாம். பூமியால் லாபமும் உண்டாம் சுமாரான தினம்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு நல்ல இன மரக்கறிவிதைகள்

பண்டத்தரிப்பு, புதன்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான நல்ல இன மரக்கறி விதைகள் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச கிருஷ்ணபிள்ளை மேற்கொண்ட முயற்சியினுல் குண்டசாலைகன்னெருவ விவசாய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

விவசாய திணைக்களத்தினுல் சிபார்சு செய்யப்பட்ட மகா இலுப்பலாம எம் ஐ-2 என்ற நல்ல இன மிளகாய் விதை உட்பட பல்வேறு மரக்கறி விதைகள் வந்து சேர்ந்துள்ளதாகவும், யாழ் மாவட்டத்திலுள்ள 12 கமநலசேவை நிலயங்கள் மூலமாக விவசாயிகளுக்கு இவை விரைவில் விநியோகிக்கப் படவுள்ளதாகவும் யாழ் விவசாய திணைக்களத்தைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

ஏற்கனவே விதைகளைப் பெறுவதற்காக தத்தமது பகுதி கமநலசேவை நிலயங்களில் முற்பணம் செலுத்திய விவசாயிகளும இவற்றைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளமுடியுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# ''விவசாயிகள்—— சந்தைவாய்ப்புக்கேற்ப பயிர் செய்யவேண்டும்''

பருத்தித்துறை, புதன்

''விவசாயிகள் விவசாய அபிவிருத்திகளை மேம்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொளவேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்க விவசாயத்திணைக்களம் தயாராக இருககின்றது எல்லோரும் ஒரே பயிரையேசெய்யாது சந்தை வசதிகளுக்கேற்ப வெவ்வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபடவேண்டும்.'

இவ்வாறு பருத்தித்துறை அம்பன் விவசாய போதனுசிரியர் பிரிவில் நடைபெற்ற விவசாயிகளுக்கான கலந்துரையாடல்லே உரையாற்றிய யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை கூறினர்.

அயபன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலுக்கான ஒழுங்குகளை அம்பன் விவசாய போதனுசிரியர் திரு. பீ பரமேஸ்வரன் மேற்கொண்டிருந்தார். திரு. எஸ் அரசரத்தினம் கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கினர்.

தொடர்ந்து அவர் தமது உரையில், ''கிராமங்கள் தோறும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைகளை ஊக்குவிக்க வேண்டும். வீட்டுத் தோட்டச் செய்கைகளுக்கான உதவிகளையும் திணைக்களம் வழங்கும். பல்வேறு இடங்களிலும் மரம் நாட்டும் இயக்கங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். மரங்களை நாட்டுவதன்மூலமேஎமது நாடு செழிப்படையும்'' எனருர்

யாழ். மாவட்ட பழச்செய்கை விவசாய உத்தியோகத்தர் எஸ். பேரின்பநாதன், யாழ் மாவட்ட விவசாய உத்தியோகத்தர் எஸ். குணரத்தினம் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான கே. விஜயரத்தினம், கே. இரகுபதி, பீ இராமநாதன், ரீ குகதாசன், என். கனகநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்கள் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் எஸ். மரியநாயகம் நன்றி கூறினர். (எ)

## சாரணர் விழா

பண்டத்தரிப்பு புதன்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் வருடாந்த குருளைச் சாரணர் விழா பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் இம்மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த 25-க்கு மேற்பட்ட பாடசாலைகள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றன.

# ''எச்சூழ்நிலையிலும் கல்வியின் தரம் குன்ருது கல்லூரியை நிர்வகித்தார்''

-கல்விப்பணிப்பாளர்

பண்டத்தரிப்பு புதன்

''தமிழ் மக்களின் மூலதனமாக விளங்கும் பெரும் சொத்து கல்வியாகும் கற்க முடியாத சூழ்நிலை நிலவும் இக்கால சட்டத்திலும் கல்வித் தரம் குன்ருது பாடசாலைகளை நடாத்திச் செல்லுகின்ற வட பிரதேசத்தின் முதன்மை வாய்ந்த அதிபர்களுள் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் சிறப்பானதொரு இடத்தை பெற்றுள்ளார் அவரது கல்விச் சேவைகளை கௌரவிக்கும் இப் பெரு விழாவில் பங்கு பற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்''

இவ்வாறு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 14 வருடகாலம் அதிபராக கடமையாற்றி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திருமதி கலாவல்லி ஆறுமுகதாசனுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினுலும் பழைய மாணவர் சங்கத்தினுலும் நடாத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திருமதி மூ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருந்தொகையான பெற்றேர்களும பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

யாழ் மாவட்டத்தில் பெண்கள் கல்லூரிகளில் பெண் அதிபர்களுக்கு பெரும் பற்ருக்குறை நிலவிவருகின்ற இக்காலகட்டத்தில் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் போன்ற தரம்வாய்ந்த அதிபர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறுவது எமது கல்வித்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கிது! எமது கலை, கலா சாரங்களுக்கும் முதன்மையளித்து பண்டத்தரிபபு மகளிர் கல்லூரி பல சாதனைகளை நிலைநாட்டிவருகின்றது.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு வித்தியானந்தன், 'துர்க்காதுரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரி திரு ப. சண்முகராசா, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க அருணசலம், புலவர் கா. வேல்முருகன், ஆசிரியர் சி. நடராசா ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரையாற்றினர்கள்

'உலக மதங்கள்' நூல் வெளியீட்டு அறிமுக உரையை திரு. ந. கருணை ஆனந்தன் நிகழ்த்தினர். ''கலாவல்லி மலர்'' என்ற பாராட்டுச் சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டது

இதனை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர்சுகந்தன் இன்னுசித்தம்பி அறிமுகம் செய்து வைத்தார். திருமதி பேளி அத்தனுசிரியார் வெளியீட்டுரையை நிகழ்த்தினர். இறுதியில் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன பதிலுரை நிகழ்த்தினர். ''தர்ம யுத்தம்'' என்ற நாட்டிய நாடகமும் நடைபெற்றது. [வா]

## திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், வியாழன்

ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விக்ன விநாயகர் ஆலய திரு விளக்குப்பூசை (சுமங்கலி பூசை) இன்று 9ம் திகதி வியாழக்கிழமை மாலை நடைபெறும்.

## நியமனம்

யாழ்ப்பாணம், வியாழ.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய பேராசிரியராக கலாநிதி பத்மநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

பேராதனை, களனி, கொழும்பு, ஆகிய பல்கலைக் கழகங்களில் வரலாறு, பண்பாடு, சமூகவியல் ஆகிய துறைகளில பேராசானுய் விளங்கிய இவர் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி எழுதிய ஆராய்ச்சிக்காக கலாநிதிப்பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஔ)

## முதலுதவிச செய்கைப்போட்டி

பண்டத்தரிப்பு புதன்

சன்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் யாழ். மாவட்ட ரீதியிலான முதலுதவிச் செய்முறைப் போட்டி பண்டத்தரிபபு இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது

இப்போட்டியில் வெளிவாரிப்பிரிவில் 15 தாதிகள் பிரிவுகளும், 10 அம்புலன்ஸ் பிரிவுகளும், 7 பாடசாலை அணிகளும் கலந்து கொண்டன

போட்டிகளின் மத்தியஸ்தர்களாக யாழ் விளையாட்டுதுறை போதனுசியர் திரு. டேவிட், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர் நலன் புரி உத்தியோகத்தர் திரு க. அருந்தவராசா, திருமதி ஜொவிதா இன்னுசித்தம்பி ஆகியோர் கடமையாற்றினர்கள். (எ)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

பணடத்தரிப்பு, புதன்

சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் பொதுத்தாதிகள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 14ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களத்தில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள குடும்பநலசேவையாளர்கள், அற்றண்டன்மார், ஆஸ்பத்திரி தொழிலாளர்கள் ஆகியோர் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

## பணிப்பாளர் அறிவிப்பு

உடுவில், புதன்

தமது அனுமதியின்றி எந்த நிறுவனங்களோ, தனியாரோ நடாத்தும் பரீட்சைகளை அரசாங்க பாடசாலைகளில் நடாத்தக்கூடாதுஎன்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

அனுமதியின்றி நடாத்தப்படும பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்ற அனுமதிக்கக் கூடாது. இவ்வறுவுறுத்தலை மீறும் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும அவர் எச்சரித்துள்ளார்.

இத்தகைய அங்கீகரிக்கப்படாத பரீட்சைகள் எதற்கும் மாணவர்களைத் தோற்ற அனுமதிக்கக்கூடாது என கல்விப் பணிப்பாளர், வட்டாரக் கல்வி அதிகாரிகள் மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

# யாழ். மாநகரசபை பகுதிக்குள் மீண்டும் திரிபோஷாமா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் போஷாக்குக் குறைந்த சிறுபிள்ளைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் மீண்டும் திரிபோஷா மா வழங்கப்படுகிறது.

யாழ். மாநகரசபையினால் நடாத்தப்பட்டுவரும் 10 கிளினிக்குகளில் பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடுதல், நிறுத்தல் வைத்திய பரிசோதனை என்பன இங்கு நடைபெறுகின்றன இந்த கிளினிக்குகளை கர்ப்பிணிகள் பயன்படுத்துவது மிகவும் குறைவாக இருக்கின்றது என்று யாழ். மாநகரசபையின் வைத்திய அதிகாரி குறைப்பட்டுக் கொள்கிறார்.

யாழ் மா நகரசபையின் கிளினிக்குகள் மூலம் வழங்கப்பட்டுவந்த ஜீவாகாரம் என்ற சத்துணவு இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் நிறுத்தத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 'யுனிசெப்' நிறுவனம் இதற்க ஒதுக்கிய 50 ஆயிரம் ரூபா பணமும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் இச் சத்துணவு கொடுப்பது நிறுத்தப்படுகிறதாம். (ச-வா)

## குண்டுவீச்சு...

(3ம் பக்க தொடர்ச்சி)

சியம் தேமைக் போன்ற பிரதான பொருட்கள் மிக உக்கிரகமாக எரிந்து கொண்டிருக்கும்போது அதனருகே செல்வது மிகவும் ஆபத்தானதாகும். அப்போது வெப்பம் தாக்காவண்ணம் சிறிது தொலைவிலிருந்தே நீரைச் செலுத்துவதற்கு முனைய வேண்டும். இதற்கு நீரிறைக்கும் கருவியை சரியான முறையில் இயக்குதல் வேண்டும். எளிய நீரிறைக்கும் கருவியானது பொதுவாக மூவரால் மிக இலகுவாகவும் வேகமாகவும் இயக்ககூடியது அதன்போது நீரைவாளிகளில கொண்டுவர ஒருவரும் கருவியின் ஆடுதண்டை இயக்க ஒருவரும் நீர்க் குழாயைப் பிடித்து நீரைப்பாய்ச்ச ஒருவரும் இயக்கினால் விரைவாகத் தீயைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அவசர நிலையில் இருவரோ அல்லது ஒருவரோ கூடவும் இதனை இயக்கலாம்.

நீர் பாய்ச்சுவதற்குப் பாவிக்கப்படும் குழாயானது தேவையினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படவேண்டும். பொதுவாக 1/2 அலகு விட்டமும் 30 அடி நீளமுமுடைய குழாபொன்றே பயன்படுத்தப்படுகிறது. ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பாத்திரங்களில் நீர் நிறைத்து இருக்குமாறு பார்த்துக் கொண்டால் தாமதமின்றி மிக விரைவாவாகத் தீயைக் கட்டுப்படுத்திவிடலாம. சரியான வகையில் திறமையாகச் செயலாற்றினால் மூன்று வாளி நீர் போதுமானது.

(தொடரும்)

## ஐஸ்லாந்து......

3ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பூச்சிய விவகாரங்கள் தொடர்பாகவும் அமெரிக்க, சோவியத் தலைவர்கள் பயனுள்ள முடிவுகளை எடுப்பார்கள்'' என்பதாகும்.




மரக்கறி மார்க்கட் பக்கம்சென்று அவதானித்தேன். எந்த எந்த மரக்கறிகள் விலையோ அவற்றையே ஒரு பெண் விரும்பி வாங்கினர். மற்றவர்கட்குக் கிடைக்காதவற்றைத் தாம் அனுபவிப்பதில் அவர்கட்கு மனத்திருப்தி.

வேறொரு பெண்ணை அவதானித்தேன். எது எது மலிவோ அவற்றையெல்லாம் வாங்கிக்கொண்டு சென்றார். அவரிடம் பேச்சுக்கொடுத்தபோது அவர் சொன்னார். ''உழுந்து மலிந்தபோது தோசை; அரிசி மலிந்தபோது பழஞ்சோறும் தனது ''பொலிசி'' என்றார்.

கணவன் அதிர்ஷ்டசாலி!

- பாணபத்திரன்

## சமாதானசபை விசாரணை; இளம்பெண்ணுக்கு ரூ. 10,000 வழங்கத் தீர்ப்பு

உடுவில். புதன்

திருமணம் முடித்தபின்னர் தமது முன்னைய காதலருடன் சென்று குடும்பம் நடத்தியதை அடுத்து கணவரினாலும், பின்னர் காதலரினாலும் கைவிடப்பட்ட இளம்பெண் ஒருவருக்கு10 000ரூபா வழங்குமாறு இணுவில் சமாதான சபை காதலனுக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

வடபகுதி கிராமமொன்றைச் சேர்ந்த ஓர் ஆணும், பெண்ணும் காதலர்களாகஇருந்தனரென்றும் இவர்களது காதலை விரும்பாத பெண்ணின் சகோதரன் பெண்ணை வேறொரு இளைஞருக்கு மணம் முடித்துவைத்தாரென்றும் சில நாட்களில் மணமகன் வெளிநாடு சென்று தமது மனைவியையும் அங்கு அழைப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டாரென்றும், இச் சம்பவம் பற்றிய விசாரணையில் தெரியவந்தது.

இதனிடையே. பழைய காதலன் பெண்ணிடம் மீண்டும் தொடர்புகொள்ளத் தொடங்கினார் என்றும் அவரின் உறுதிமொழியை நம்பிய பெண் அவருடன் சென்று வாழ்க்கை நடாத்தினார் என்றும் இதனைக் கேள்வியுற்ற வெளிநாட்டிலுள்ள கணவன் தம்மனைவியை இனிமேல் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என அறிவித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பழைய காதலனுடன் வாழ்ந்த மனைவி தம்மை கல்யாணம் செய்யுமாறு வற்புறுத்தியபோது, காதலன் மறுத்து சட்டபூர்வமான ஒருவரின் மனைவியைத் தாம் மீண்டும் சட்டபூர்வமாகத் தமது மனைவியாக்கமுடியாதென்று தெரிவிக்கவே, மனைவி அவர்மீது சமாதான சபையில் வழக்குத் தொடர்ந்தார்.

இவ்வழக்கை விசாரணை செய்த இணுவில் சமாதான சபையினர், சட்டப்படி கல்யாணம் செய்துகொண்டபின் வேறொருவருடன் குடும்பம் நடத்தியமையை, வேறொருவரின் மனைவி என்று தெரிந்துகொண்டும் குடும்பம் நடத்தியமை ஆகிய இரு செயல்களும் சமூகவிரோதச் செயல்கள எனத் தீர்ப்பு வழங்கினர்.

எனினும் பெண்ணின் எதிர்காலத்தை முன்னிட்டு, அவரின் காதலன் 10 000 ரூபாவைச் செலுத்தவேண்டும் என்றும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு பெண் வாழ்க்கையை நடத்தலாமென்றும் சமாதான சபையினர் வழங்கிய தீர்ப்பை இருவரும் ஏற்றுக்கொண்டனர்.


## பிரயாண ஒழுங்கு

இம்மாத இறுதிக்குள் டென்மார்க் செல்ல விரும்புவோர் உடனே தொடர்புகொள்ளவும்.

ஆங்கிலம் சரளமாகப் பேசத் தெரிந்தோராயின் கனடாப் பிரயாணமும் ஒழுங்கு செய்யலாம்.

த. செல்வநாயகம்,
''ஸ்ரீ சாந்தி நிகேதன்'',
8/2, வளாக ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [C-5076]

## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட் ★ பெல்ஜியம்
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலண்ட் ★ டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
(ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை)
உடுவில் கிழக்கு, உடுவில். A 1372


## நவராத்திரியும் நூலக திறப்புவிழாவும்

யாழ்ப்பாணம், வியாழன்

வண். வடமேற்கு ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய நவராத்திரி விழாவும் நூலகத் திறப்பு விழாவும் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு வி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் காலை நவராத்திரிபூசை ஆராதனையும் திரு க. சிவராமலிங்கத்தின் 'வீரத்திரு' என்னும் விரிவுரையும் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் வட பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் திரு க. கனகசபை மில்க்வைற்அதிபர் திரு க. கனகராசா ஆகியோர் மங்கல விளக்கேற்ற ஆரம்பமாகும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜெசெந்தில்நாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சனசமூக நிலைய நூலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுவார் சிறப்பு விருந்தினர்களாக திரு ஆ கோ. பொன்னுச்சாமிதிரு ஆ. இரகுநாதன் திரு இ தவகோபால் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர். (ப)

## கிராமத்தில் முதல் பட்டதாரி



வலம்வெட்டித்துறை நிருபர்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட தம்பையா புவனேந்திரன் பொருளியலில் விஷேச சித்திபெற்று அக் கிராமத்தின் முதற்பட்டதாரியாக விளங்குகின்றார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை சொற்றுவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், தேவரையாளி இந்துக் கல்லூரியிலும், நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்தார்.

கலைப்பட்டதாரியாகப் பட்டம் பெற்றமையைக் கௌரவிக்குமுகமாக சில நாட்களுக்கு முன்னர் பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தினரும் பொலிகண்டி பாரதி மாதர் சங்கமும் பொலிகண்டி பாரதி இளைஞர் மன்றமும் ஒன்று சேர்ந்து பாராட்டு விழாவினை நடாத்தினர்.

இவர் பாரதி சனசமூக நிலையச் செயலாளராகவும் பாரதி சன சமூக நிலைய விழிப்புக்குழுச் செயலாளராகவும், பாரதி இளைஞர் மன்றத் தலைவராகவும் பொலிகண்டி வீரபத்திரர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபை உறுப்பினராகவும் விளங்குகின்றார். கவித்துவத்திலும் ஒரு தனித்துவத்துடன் விளங்குமிவர் பொலிகண்டி தம்பையா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

## கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வியாழன்

நவராத்திரி விழாவை முன்னிட்டு சிவானந்த சமய பாடசாலைச் சிறுவர்களின் கலை நிகழ்ச்சியும் வித்தியாரம்பமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் பல்கலைமணி
க. தம்பிராசா ஜே. பி.
(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)
மண்ணில்:- 12-04-1928
விண்ணில்:- 09-09-1986

தொண்டின் உறைவிடமே. உன்னை அர்ப்பணித்து ஆற்றிய உண்மை தொண்டர் பணிசெய்யும் வேளை எம்மைப் பிரிந்து உன்னை துணையாக கூட்டி காலன் விண்ணேகிசென்றானே. இறைவன் இல்லை என்பார் உண்டு. உன்னை சமூகதொண்டன் இல்லை என்பார் உண்டோ.

ஆத்மா சாந்தி அடைய வேண்டிநிற்கும் நண்பர்கள், உறவினர்கள்.

வாணிகிரிஜேசன்ஸ்,
ஆனைக்கோட்டை
(C-5091)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தங்கவேலாயுதம் ரமேஸ்குமார்
உதயம்;- 1970-08-31
வீரமரணம்:- 1986-09-09

அன்பு ரமேஸ்!

நமது நாட்டின்விடுதலைப் பயணததில் உனது பங்களிப்பு மகத்தானது. மீளாத்துயில் கொண்டதன்மூலம் எல்லோர் மதியிலும் அழியாத இடத்தினை பெற்றுக்கொண்டாய். இதன் மூலம் நீ சாகவில்லை. எம்முடன் வாழ்ந்துகொண்டேஇருக்கின்றாய எனவே எம்மை விட்டு நீ பிரியவில்லை, உம்முடைய நினைவுடனே என்றும் வாழும்

அம்மா, பெரியம்மா, குஞ்சன்று, அக்காமார், அததான், அண்ணமார், தம்பிமார், தங்கைமார், அப்பப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

திருநெல்வேலிதெற்கு,
யாழ்ப்பாணம்
(C-5060)

விபத்து

## ரூபா 10ஆயிரம் நஷ்டஈடு செலுத்துமாறு தீர்ப்பு

உடுவில், புதன்

வீதிப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வாகனம் ஓட்டியமைக்காகவும் அதன் காரணமாக ஏற்பட்ட இழப்புக்குமாக ரூபா பத்தாயிரம் செலுத்த வேண்டும் என்று மோட்டார் சைக்கிள் டிராக்டர் விபத்தொன்றை விசாரணை செய்த இணுவில் சமாதான சபை தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடுவில் மருதனாமடம் சந்தியில் நடைபெற்ற இவ்வீதி வ்பத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார். அவரது காலில் முறிவு ஏற்பட்டு நடக்க முடியாதநிலை ஏற்பட்டது.

அராலியை சேர்ந்த டிராக்டர்ஒன்றும், சண்டிலிப்பாயை சேர்ந்தவருடைய மோட்டார் சைக்கிளுமே மோதிக்கொண்டன.

இவ்வீதி விபத்தை விசாரணை செய்த இணுவில் சமாதான சபை டிராக்டர் சாரதி வீதி பாதுகாப்புச் சட்டத்தை மீறி கவனமின்றி வாகனத்தை செலுத்தியமையாலேயே விபத்து ஏற்பட்டது என்றும் எனவே மோட்டார் சைக்கிள்காரருக்கு நஷ்டஈடாக ரூபா 10 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் மோட்டார் சைக்கிளை திருத்துவதற்காக ரூபா 2ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது.

இத்தீர்ப்பினை இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்டனர். (ஏ)

## மரம் நடுகை பற்றி சுவரொட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

நல்ல சூழலை மீண்டும் உருவாக்க வீட்டுக்கொரு மரக்கன்று நடுவோம் 'என்று மரம் நடுகை பற்றிய கோஷங்களையுடைய சுவரொட்டிகள் யாழ்ப்பாணமெங்கும் காணப்படுகின்றன.

தேசிய இளைஞர் சமூக சேவை மன்றம் இம்மரம் நடுகை பற்றிய பிரசார சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. (ச-ஓ-கே)

## சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிபெற்று இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு பாடசாலை அதிபருக்கு அனுப்பப் பட்டுள்ளதாக யாழ். மாவட்ட புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் எஸ் பால சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

1977—1984ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் சித்தியடைந்தோரின் சான்றிதழ்களே தயாரிக்கப்பட்டுள்ளன.

## இணைந்த சேவை

நெல்லியடி, புதன்

நெல்லியடிப் பிரதேச பிரஜைகளின் குழுக்கள் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களுடன் இணைந்து உணவு முத்திரை வழங்கல் மற்றும் நட்ட ஈட்டுப் படிவங்கள் வழங்கல் தகுதியானவர்களின் பெயர்களை சிதப்புரை செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளன. (வா)

## உப அலுவலகம்

பருத்தித்துறை, புதன்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை செம்பியன்பற்று உப அலுவலகப் பகுதியில் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுவரும் பொது சன நூலகக் கட்டிட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் விரைவில் இப் பொதுசன நூலகம் திறந்து வைக்கப்படுமெனவும் உப அலுவலக அதிகாரமளிக்சப் பட்ட உத்தியோகத்தர் திரு. கணேஸ் தெரிவித்துள்ளார்.

## இந்திய ஆசியாட் வீரர்களுக்கு கேரள அரசு கௌரவம்!

புதுடில்லி, அக். 8

'ஆசியாட்' பந்தயத்தில் வெற்றிகளையீட்டிய இந்திய அணி வீரர்களுக்கு புதுடில்லியில் நேற்று வரவேற்பளிக்கப் பட்டது.

ஓட்ட வீராங்கனையான பி. டி. உஷா மற்றும் சர்தார் சிங் உட்பட வெற்றிப்பதக்கங்களை வென்ற இந்திய வீரர்கள் நேற்று தென் கொரியாவிலிருந்து புதுடில்லி வந்தனர்.

'ஆசியாட்' பந்தயத்தில் 4 தங்கப்பதக்கங்களைப் பெற்ற ஓட்ட வீராங்கனையான பி.டி. உஷாவின் மாநிலமான கேரளா, தங்கப்பதக்கம் பெற்றவர்களுக்கு பணப் பரிசுகளை அளித்துள்ளது.

தங்கப்பதக்கங்களை பெற்றோருக்கு ஒரு லட்சம் ரூபாவும், வெள்ளிப்பதக்கம் பெற்றோருக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுமென கேரள மாநில முதலமைச்சர் திரு. கே. கருணாகரன் அறிவித்துள்ளார்.

இதுதவிர பயிற்சியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப் படுமென்றும், இந்திய வீரர்கள் வெளிநாடுகளில் பயிற்சி பெறவும் கேரள அரசு உதவுமென்றும் முதலமைச்சர் கருணாகரன் மேலும் தெரிவித்திருந்தார்.

## உற்சவம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 12ம் திகதி ஆரம்பமாகுமெனவும் 18ம் திகதி கப்பல்த் திருவிழாவும் 21ம் திகதி கடல் தீர்த்தத் திருவிழா நடைபெறுமெனவும் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு கே. நாகமுத்து அறிவித்துள்ளார். [வா]

## பால் பதனிடும் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், வியாழன்

தேசிய பால் சபையின் கிளிநொச்சி பால் பதனிடும் தொழிற்சாலையை மில்க் இன்டஸ்ரீஸ் ஒவ் லங்கா கம்பனி லிமிட்டட்' என்னும் ஸ்தாபனம் பொறுப்பேற்று உள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ் பகுதிகளில் மேற்படி கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்ட முதல் பால் பதனிடும் தொழிற்சாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)


# முல்லைத்தீவு அபிவிருத்திச்சபை கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபையின் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 01-01-87 தொடக்கம் 31-12-87 வரை குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் என்னால், 30-10-86 ந ப 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் இக்கேள்விகள் சம்பந்தமான கேள்விப்படிவங்களை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரப்பணத்தையும் வங்கி உண்டியல் மூலம் அவ் அவ் உப அலுவலகத்தில் செலுத்தி, அவ் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இக்கேள்விப் படிவங்கள் 10-10-86 மு. ப 9 00 மணி தொடக்கம் 29-10-86 பி ப. 4 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்படிவங்களைப் பெறுகின்ற போது சம்பந்தப்பட்டவர்கள் தமது பெயரையும் விலாசத்தையும் நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையைக் காண்பிப்பது அவசியமாகும். அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விப் படிவங்களைக் குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு முன்னர் அபிவிருத்திச்சபையின் தலைமை அலுவலகத்திற்கு பதிவுக் கடிதங்கள் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது இதற்காக அக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். கேள்விகள் 30-10-86 பி. ப. 2.00 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக் காரர்கள் சமூகமளிப்பது விரும்பத்தக்கது

க பொன்னம்பலம்
கேள்விச்சபைத் தலைவரும், மாவட்டச் செயலாளரும்,
மாவட்ட அபிவிருத்திச்சபை, முல்லைத்தீவு.

| உப அலுவலகம் | விடயம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப்படிவக் கட்டணம் | கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| (1) முல்லைத்தீவுப் பட்டினம் | முல்லைத்தீவுப் பொதுச்சந்தை | 200,000 00 | 100 00 | 5000 00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 25 000 00 | 100 00 | 5000 00 |
| | ,, ,, ,, இல. 2 | 25 000.00 | 100 00 | 5000 00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 15 000 00 | 50 00 | 3000 00 |
| (2) முள்ளியவளை | தண்ணீரூற்றுச்சந்தை | 25,000.00 | 50 00 | 2000 00 |
| | முள்ளியவளைச் சந்தை | 10,000.00 | 50 00 | 2000 00 |
| | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 25,000 00 | 50 00 | 3000 00 |
| | ,, ஆட்டிறைச்சிகடை | 3,000 00 | 50 00 | 1000.00 |
| | முள்ளியவளை மாட்டிறைசிச்க்கடை | 10 000 00 | 50.00 | 2000 00 |
| | முள்ளியவளை சந்தைக்கடை இல. 1 | 300 00 | 50 00 | 250 00 |
| | ,, ,, இல. 2 | 250 00 | 50 00 | 250 00 |
| | ,, ,, இல. 3 | 250 00 | 50.00 | 250 00 |
| (3) புதுக்குடியிருப்பு | புதுக்குடியிருப்புச் சந்தை | 20 000.00 | 50.00 | 1000 00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 50.00 | 2000 00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 3 000 00 | 50.00 | 500 00 |
| | உடையார்கட்டு சந்தை | 600 00 | 50 00 | 500 00 |
| | புதுக்குடியிருப்புச் சந்தைக்கடை இல. 1 | 150 00 | 50.00 | 250 00 |
| | ,, ,, இல 2 | 150 00 | 50 00 | 250.00 |
| (4) ஒட்டுசுட்டான் | ஒட்டுசுட்டான் சந்தை (ம. வி. முன்பாக) | 5 0.00 | 50.00 | 250 00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 9 000 00 | 50 00 | 1000 00 |
| (5) ஒலுமடு | மாங்குளம் சந்தை | 10 000.00 | 50 00 | 2000 00 |
| | ,, மாட்டிறைச்சிக்கடை | 5 000 00 | 50 00 | 2000 00 |
| | ,, ஆட்டிறைச்சிக்கடை | 5 000.00 | 50 00 | 1000 00 |
| (6) முள்ளிவாய்க்கால் | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 3 000.00 | 50 00 | 500 00 |
| (7) செம்மலை | குமுளமுனைச்சந்தை | 500 00 | 25.00 | 250 00 |
| | செம்மலை சந்தை | 500.00 | 25 00 | 250 00 |
| | அளம்பில் சந்தை | 500 00 | 25 00 | 250 00 |
| | குமுளமுனைச் சந்தைக் கடை இல. 1 | 150.00 | 25.00 | 250 00 |
| | குமுளமுனைச் சந்தைக் கடை இல. 2 | 150 00 | 25.00 | 250.00 |
| (8) துணுக்காய் | துணுக்காய் சந்தை | 1,500 00 | 25 00 | 500.00 |
| | மல்லாவிச்சந்தை | 2,500 00 | 50 00 | 1000 00 |
| (9) பாண்டியன்குளம் | பாண்டியன்குளம் புதிய சந்தை | 350 00 | 25 00 | 250 00 |
| | ,, பழைய சந்தை | 300 00 | 25 00 | 250 00 |
| | ,, சந்தைக் கடை இல 1 | 100 00 | 25.00 | 250 00 |
| | ,, சந்தைக் கடை இல. 2 | 100.00 | 25 00 | 250.00 |

க. பொன்னம்பலம்
கேள்விச்சபைத் தலைவரும், மாவட்டச் செயலாளரும்
அபிவிருத்திச்சபை முல்லைத்தீவு.

(A 1443)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 459ம் இலக்கத்தில் வசித்து காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை காசிப்பிள்ளையின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்து சம்பந்தமாக

காலஞ்சென்றவர்.

வழ. இல. தத்துவம் / 3988 காசிப்பிள்ளை கைம்பெண் பரமேஸ்வரி, இல. 459 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம்நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(C 5101)

## கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பல்கலைக்கழகச் சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் நேற்று மினி வானில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள். உரும்பிராய் சந்தியில் இருக்கும் சந்தையா நகைக்கடையில் கொண்டு வந்து கொடுக்கவும் ரூபா நூறு சன்மானம் தரப்படும். (C 5108)

சதானந்தன் வாசுகி என்பருடைய 678010936V தேசிய அடையாள அட்டையும், க. பொ. த. [உயர்தர] பரத நாட்டிய செய் முறைப் பரீட்சைக்குரிய பிரவேசப் பத்திரமும் 8-10-86 காலை இந்து மகளிர் கல்லூரிக்கும், இந்துக் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். 78, சந்தன மாதா கோவில் ஒழுங்கை, கண்டுகுளி, யாழ்ப்பாணம். [C 5107]

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கலர்
நியாயம்

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுள்ளது)

### பகிரங்க ஏலவிற்பனை

கனரகப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனையில் பங்கு கொள்ளத் தவருதீர்கள். தனியார்நிறுவனம் ஒன்றையே அமைக்கக்கூடிய சகலவிதமான இரும்புப்பொருட்கள், வர்ணப் பூச்சு மைகள், போமிக்கா சீற். எஸ்லோன் பைப் இணைப்புக்கள் யாவும் உண்டு.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பியவர்கள் வேலை நாட்களில் முற்பகல் 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 4-30 மணிவரை பார்வையிடலாம்-

இடம்:- யாழ். ப. நோ. கூ. சங்க இரும்புக் கிளை,
289, 291, ஸ்ரான்லிவீதி.
யாழ்ப்பாணம்.

திகதி:- 1986-10-25 (ஏல விற்பனை நடைபெறும் திகதி)

பொது முகாமையாளர்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
259, மின்சாரநிலையவீதி.
யாழ்ப்பாணம்,

(A 1447)

## 61-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



கதிரவேலு ஞானலிங்கம்
(பெரியபிள்ளை)

ஆண்டவன் படைப்பு
02-08-1964

அரக்கரின் அழிப்பு
10-08-1986

அன்புச் செல்வமே! எம் இனிய வாலிபனுகி அன்பாய் பெரியபிள்ளை என ஆசையாய் அழைத்திட்ட அன்புத் தம்பியே. உனது வளர்ச்சியையும் அழகையும் கண்டு மனம் பூரித்திருந்த வேளையிலே எங்களைத் தவியாய் தவிக்க விட்டு நீயோ பழக் கடையில் வைத்து ஷெல் அடித்து நீள் பயணமாய் போய்ச் சேர்ந்து விட்டாய் உனது உடமைகளையும், உமது சக தோழர்களையும் காணும் போது உள்ளம் துடிக்கின்றது. உம்நினைவுதான் எங்கள்முன் ஓடி வருகின்றது. உனது உருவம் நீர் இனிய குரலில் பாடும் பாட்டும் அன்புப் புன்சிரிப்பும் எங்கள் மனதை விட்டு ஒருபோதும் அகலாது காலமெல்லாம் உமது நினைவால் கண்ணீரோடு வாழ்கின்றோம் உமது ஆத்மா சாந்தயடைய வேண்டி நிற்கும் உமது பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துணர்மார், உற்றார் உறவினர், நண்பர்கள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. C 5106

## வேட்டைக்குச்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச் சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதி மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. [சி]

## தனியார்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

யாகும்.

தினமும் பிரயாணம்செய்யும் ஊழியர்களுக்கும், ஏனையோர்களுக்கும் இக்கட்டண அதிகரிப்பால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மிகவும் மனம் வருந்துகின்றேன் மேற்கூறிய காரணங்களின் பொருட்டு இக்கட்டண உயர்வு தவிர்க்கமுடியாத தொன்று என்பதை ஒத்துக் கொள்வார்கள். இம்முயற்சிக்கான ஒத்துழைப்பைச் சகல மக்களிடமுமிருந்து வ. பி போ. சபை எதிர்பார்க்கின்றது''.

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என்றும் திருமலைமாவட்டில் உள்ள சுமார் பத்தாயிரம் கிராமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்பொருட்கள் வழங்கப்படுவதைத் தடுத்துள்ளனர் என்றும் அச்செய்திகள் பலத்த குற்றச்சாட்டுகளைதெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்தே பல வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் திருமலை மாவட்ட நிலைமைகளை நேரில் கண்டறியுமுகமாக இங்கு சென்றுள்ளனரெனத்தெரியவந்துள்ளது. (சி

## தமிழீழத்தில்...

[ ம் பக்கத்தொடர்ச்சி]

சர்வதேச பிரச்சார ரீதியாகவும் தன்னைப் பலப்படுத்திவருகின்ற ஸ்ரீலங்கா அரசுக்கெதிரான எமது போராட்டத்தில் அவர்களுக்குப் பொருளாதார ரீதியான நெருக்கடியை ஏற்படுத்துவது அவசியம். அதே வேளை நாமும் பலம்பெற வேண்டும்.

இந்தவகையில் எமது முதல் கட்ட நடவடிக்கையாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஏற்றுமதியை பரந்தளவில் பாதிக்கும் வகையில் இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் தேயிலைகளில் 'சயனைட்' நஞ்சு கலந்ததன் மூலம் உலகச் சந்தையில் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தியதுடன், உலகளாவிய ரீதியில் அதன் இன ரீதியான அடக்குமுறை பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளோம் இதனால்இலங்கைக்குகிடைத்து வந்த ஆயுத. இராணுவ நிதி வசதிகள் குறைக்கப்பட்டது

எனினும் எமது மலையக மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுமென்பதனால் எமது நடவடிக்கை நிறுத்தப்பட்டுவிட்டது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக 'செவன' என்றும், அதிர்ஷ்ட லாபச் சீட்டு என்றும் தமிழ் பகுதிகளில் நடந்து வந்த சுரண்டல்கள் எம்மால் முற்றாகத் தடைசெய்யப்பட்டது. இத்தகைய சுவீப் டிக்கட்டுகளை விற்பதன்மூலம்தமது வாழ்க்கையை நடாத்திவந்த ஊனமுற்றவர்களின் வேண்டுகோளையும் நாம் நிராகரித்தோம். தமிழீழ எல்லைப்பிரதேசங்களில் எந்த மூலையிலும் விற்கப்படாது என்று எச்சரிக்கவும் பட்டது இத்தகைய சுரண்டல் ரிக்கற்றுக்களினால் ஒரிரு பரிசுகள் நம்மவரிடையே விழுந்தாலும், இதனால் அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற நிகரலாபம், நேரடியாகவே பாதுகாப்பு நிதிக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது என்று துண்டுப் பிரசுரங்கள் அறிக்கைகள் மூலம் எம்மால் விளக்கப்பட்டதும் அவர்களாலே அதன விற்பனை பூரணமாக நிறுத்தப்பட்டது

எமது முதலாவது சீட்டிழுப்பு நவம்பர் மாதம் 10ந் திகதி திங்கட்கிழமை மாலை நல்லூர் கந்தசாமி கோவில் மேற்குவீதியில் நடத்தப்படும். [ச]

## மின்சாரம் தாக்கி மரணமானார்!

யாழ்ப்பாணம்.வியா.

வீரகேசரி யாழ் கிளை முகாமையாளர் திரு. வே ஸ்ரீகாந்தா (36 வயது) மின்சாரம் தாக்கி அகால மரணமானார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சுன்னாகத்திலுள்ள அவரது வீட்டில் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது

இவரது அகாலமரணத்தை யொட்டி சங்குவேலி இந்து மன்றம் 'கண்ணீர் அஞ்சலி' பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டது:

''தமிழ் அன்பன், பண்பாளன், நாவலர் அபிமானி, அஞ்சா நெஞ்சன், சைவசீலர் தமிழ் அபிமானி வே. ஸ்ரீகாந்தாவுக்கு கண்ணீர் அஞ்சலி'' என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

உழைக்கும் பத்திரிகையாளர்கள், சைவாபிமானிகள், கல்விமான்கள், பொதுமக்களுட்பட ஏராளமானோர் அவரதுபூதவுடலுக்குஅஞ்சலிசெலுத்தினர்கள்.நேற்றுமாலை அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. (மா)

## விரிவுரையா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

விரிவுரையாளருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சகல பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டிருந்தன

(நுவ. நி. மா

## நயினதீவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசாங்க அதிபர் தற்சமயம் கொழும்பு சென்றுள்ளபடியால் இவர்கள் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். இராமநாதனுடன் தொடர்பு கொண்டபோது கைதானவர்கள் விடயம் தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சி எடுத்தும் தொலைபேசி சீர்கேடு காரணமாக இவர்களைப் பற்றிய தகவல்களைப் பெறமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பத்து பேர் கைது

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய போரதீவு, வெல்லாவெளி கமாண்டோ முகாம்களிலிருந்து கூட்டாக ரோந்து சென்ற கமாண்டோக்கள் பத்து பொதுமக்களை கைது செய்துள்ளனர்.

## சார்க்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை அடுத்த மாத நடுப்பகுதிக்குப்பின்பே நடைபெறுமென எதிர்பாக்கப்படுகிறது

இந்த மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையில் போராளிகள் குழுக்கள் பங்கு பற்றுவதானல், அவர்கள் தமது சொந்தக் கருத்துக்களையே இப்பேச்சுவார்த்தையின் அடிப்படையாக வைத்துப் பேசுவார்களென போராளிகள் குழுக்களின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எனினும் முழுமையான தனிச் சுதந்திர நாடொன்று வேண்டுமென்றே சில போராளிகள் குழுக்கள் வலியுறுத்தி வருகின்றன. (கே-சி)

நியூவிக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடு
கைதியின் வேட்டை
சரத்பாபு, சிலுக்கு
(VGP மாஸ்ரர்)
நியூவிக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 23532 A 5109

பிரயாண ஒழுங்குகள்
★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
N. Bala

பஸ் இல. 764, திருச்செல்வம் வீதி,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1395]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 9 10-86

யாழ். கோட்டை முகாமிலிருந்து பீரங்கி வண்டி, கார்கள், ட்ரக் சகிதம் வெளியேறிய

# இராணுவத்தினரை எதிர்த்து புளட் போராளிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியா.

யாழ் கோட்டையிலிருந்து பீரங்கி வண்டி, (ஆமட்கார்) இரண்டு கார்கள், ஒரு ட்ரக் சகிதம் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள பாலத்தக்கு நடந்து வந்த இராணுவத்தினரை சென்றிக்கு நின்றிருந்த 'புளொட்' போராளிகள் நிலக் கண்ணி வெடி வெடிக்கச் செய்து பின் வாங்கச் செய்தனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் பீரங்கி வண்டியுடனும், ஆமட்கார் இரண்டு வெள்ளை நிறக் கார்களுடனும், ஒரு ட்ரக் வண்டியுடனும் கோட்டை முகாம் இராணுவத்தினர் யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் யாழ் மாநகர சபைக் கட்டிடத்துக்குமிடையில் அமைந்துள்ளபாலம்வரை வந்து நின்றனர். இதனைக் கண்ட இப்பகுதிகளில் சென்றிக்கு நிற்கும் 'புளொட்' போராளிகள் முதலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் இராணுவமோ ஆமட்காரோ, வாகனங்களோ திரும்பிச் செல்லாமல் அப்படியே நின்றிருந்தன. எனவே புளொட் போராளிகள் நிலக்கண்ணி வெடி ஒன்றினை வெடிக்க வைத்தனர். இதன் பின்பு ஆமட்கார் பின்புறமாக கோட்டை நோக்கிச் சென்றது. அதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரியும், இராணுவ வீரர்களும் கார்களுடன் திரும்பிக் கோட்டைக்குச் சென்றனர்.

காலை 8 மணி முதல் 12 மணி வரை பாலத்தில் இராணுவத்தினர் வாகனங்களுடன் நின்றனர்.

குறித்த பாலம் ஏற்கனவே 'புளொட்' போராளிகளினால் குண்டு வைத்து உடைக்கப்பட்ட நிலையில் இருப்பது தெரிந்ததே. பாலம் உடைந்திருந்ததினாலேயே [ஆமட்கார்] பீரங்கி வண்டி முன்னேறாமல் நின்றிருந்தது எனத் தெரிகிறது.

நேற்றும் 'லொறி பாஸ்' பெற்றுக்கொள்வதற்காக கோட்டைக்குச் சென்றவர்களைக்கொண்டு புல், செடி என்பன இராணுவத்தினரால் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. (ச)

## இராணுவம் சுட்டு இளைஞர் மரணம்

வவனியா, புதன்

கோயில் குளத்தில் ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு இளைஞர் பலியானதாகவும், மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஒ)

## நவீனரக ஆயுதங்களுடன்—
# விடுதலைப்புலி போராளிகள் நெடுங்கேணியில் அணிவகுப்பு

வவனியா புதன்

நெடுங்கேணிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நீண்டதொரு ஊர்வலமொன்றை நடத்தினர்.

இராணுவ உடை தரித்த 300 வீரர்கள் இவ்வூர்வலத்தில் நவீனரக ஆயுதங்களுடன் அணிவகுத்துச் சென்றதாக நெடுங்கேணி மக்கள் தெரிவிக்கின்றனர்

இந்த ஊர்வலத்தில் சென்றவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்கள் தீர்த்துக்கொண்டு அணிவகுத்துச் சென்றதாகவும் அவர்கள் கூறினர்.

மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற இந்த அணி நடை ஊர்வலத்தின் இறுதியில் நவீனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட பல வாகனங்கள அணிவகுத்துச்சென்றதாவும் நெடுங்கேணி மக்கள் தெரிவித்தனர். (ஒ)

## மட்டு. பல்கலைக்கழககல்லூரி தரமுயர்த்தப்பட்டுள்ளது

கொழும்பு, புதன்

மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பல்கலைக்கழக பூரண அந்தஸ்து கொண்டதாக கிழக்கிலங்கை பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழக அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழு மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.

மட்டக்களப்புக் கல்லூரி 1981-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை அடைந்திருக்கின்ற முன்னேற்றம் பற்றி இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் உயர் கல்வி அமைச்சின் செயலாளருமான கலாநிதி ஸ்ரான்லி கல்பகவே விரிவாக எடுத்துரைத்தார்.

இலங்கையின் எட்டாவது பல்கலைக்கழகமாக விளங்கும் இப்பல்கலைக்கழகம் விஞ்ஞானம், விவசாயம், வர்த்தகம். முகாமைத்துவம், கலாசாரம் ஆகிய பீடங்களைக் கொண்டவையாக அமைந்துள்ளது.

இப்பல்கலைக் கழகத்தில் போதனைகள் யாவும் ஆங்கில மொழியிலே நடைபெறும். (ஒ-சி)

## யாழ்.பல்கலைக்கழக 1986ம் ஆண்டின் விஞ்ஞான பீட பரீட்சை விபரங்கள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1986-ம் ஆண்டு விஞ்ஞான பீட இரண்டாம் வருட பரீட்சை இம்மாதம் 20-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று துணைவேந்தர் சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 3-ம், 4-ம், வருடப் பரீட்சைகளும் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1986/87-ம் ஆண்டுக்குரிய விஞ்ஞான பீட விரிவுரைகள் அடுத்த மாதம் 3-ம் திகதி ஆரம்பமாகும் கலைபீடத்தின் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்புளோமா பரீட்சை இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும், 3-ம் வருடப் பரீட்சைகள் இம்மாதம் 28-ம்திகதி ஆரம்பமாகும், இதனைத் தொடர்ந்து 4-ம் வருடப் பரீட்சைகள் நடைபெறும்.

1986/87-ம் ஆண்டுக்குரிய கலைப்பீட விரிவுரைகள் இம்மாதம் 20-ம் திகதியிலிருந்து நடைபெறும். (ஒ)

## வீர வணக்கம்

யாழ்ப்பாணம், வியா.

சாம்பல்தீவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் மரணமடைந்த கப்டன் ரூபின் என்பவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 8ம் திகதி சாம்பல்தீவில் முகாம் அமைக்க வந்த ராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலின் போது இம் மண்ணின் மீட்புக்காக களத்தில் தனது இறுதி மூச்சுள்ளவரை போராடி வீரமரணம் அடைந்த "கப்டன் ரூபின்" (புன்னாலைக்கட்டுவன்) அவர்கட்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

## மே. இந்திய அணி நாளை வருகிறது

டாக்கா, ஒக் 8

மே. இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இம்மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு மே. இந்திய கிரிக்கெட் அணி நாளை 10ம் திகதி பாகிஸ்தான் வருகிறது.

3 டெஸ்ட் போட்டிகளிலும் 5 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும், மூன்று 3நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளும் மே. இந்திய அணிக்கு விவியன் ரிச்சர்ட்டும் பாகிஸ் அணிக்கு இம்ரான் கானும் தலைமைதாங்குவார்கள். [சி]

## எம் ஜி ஆர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய யோசனைகளை வலியுறுத்தி, இலங்கை அரசின் யோசனைகளுக்குப்பதில் யோசனைகளை இணை அமைச்சர் சிதம்பரம், இந்திய அரசியல் சட்ட நிபுணர் எஸ். பாலகிருஸ்ணன் ஆகியோரிடம் சமர்ப்பித்துள்ளது. இந்த யோசனைகளை திரு. பாலகிருஷ்ணன் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் சட்ட உருவாகச் சமர்ப்பித்துள்ளதாகவும் புதுடில்லியிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் இலங்கை அரசுடன் கூட்டணி நடத்தவுள்ள மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையில் இவைகள்சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், இந்த மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தை நடத்துவதுதொடர்பாக முடிவெடுப்பதற்காகவே முதலமைச்சர் குழு புதுடில்லி விரைந்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறின. இந்த மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், லங்கை அரசாங்கத்தின்சார்பில் மூன்று முக்கிய அமைச்சர்கள் பங்குபற்றுவார்களென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் முதலமைச்சர் குழு இன்று இந்திய உள்துறை அமைச்சர் பூட்டா சிங்கைச்சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

குறிப்பிட்ட இந்த மூன்றும் கட்டப்பேச்சுவார்த்தையில் போராளிகள் பங்கு பற்றுவதா இல்லையா என்பது பற்றி இன்றைய பேச்சுவார்த்தையில் தான் தீர்மானிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தமிழ்ப்போராளிகள் மேலும் தாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதானால் திம்புப்பேச்சுவார்த்தையின்போது தாம் சமர்ப்பித்த நாலு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் தான் நடத்துவதெனவலியுறுத்திக் கூறிவருகின்றனர் இச்சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் இராமச்சந்திரன் எவ்வகையிலும் தாம் பேச்சுவார்த்தைக்குப் போராளிகளை அழைத்துவர முயல்வேன் எனக் கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது. (சி-கே)

## மரண அறிவித்தல்

### நா- பத்மநாதன்

தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உடற்பயிற்சி விரிவுரையாளர் திரு. நா. பத்மநாதன் அகால மரணமடைந்துள்ளார். ஈமைக்கிரியைகள் 9 - 10 - 86 வியாழக்கிழமை இன்று மாலை 4 மணிக்கு அன்னாரின் வல்வெட்டி இல்லத்தில் நடைபெறும்.

திருமதி. பத்மநாதன்.

(A 1449)

### திருமதி குணமணி அல்பேட்

உடுவில் லவ் லேனைச் சேர்ந்த திருமதி குணமணி அல்பேட் காலமானார். இவர் அல்பேட்டின் (ஓய்வு பெற்ற விற்பனைத். திணைக்கள சாரதி) அன்பு மனைவியும் சந்திரசேகரா (ஆசிரியர் கொழும்பு), ஸ்ரீரஞ்சனி (தொலைத்தொடர்பு திணைக்களம் யாழ்ப்பாணம்), ஸ்ரீரஞ்சன் (லங்கா சீமெண்ட் லிமிட்டெட், காங்கேசன்துறை), கீதாஞ்சலி (Ford Rodes Torranton and Company Colombo), விஜயா, ஜெயரஞ்சன், விஜயரஞ்சன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நாகலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புப்புதல்வியும், சரோஜினிதேவி, புஸ்பராணி, சத்தியபாமா (W. Germany) மங்கையற்கரசி (இந்தியா), பத்மினி, கருணாநிதி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 9-10-86வியாழக்கிழமை(இன்று) பி. ப. 2-00 மணியளவில் மருதனாமடம் பூவோடை மயானத்தில் நடைபெறும் உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீரஞ்சன்
(Wood Lands)
லவ் லேன், உடுவில்.

C 5102

## மரண அறிவித்தல்

### திருமதி சாயாதேவி சுந்தரராஜா

பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை திருமதி சுந். சாயாதேவி காலமானார். இவர் ஓய்வுபெற்ற யாழ்ப்பாண கூட்டுறவு மாகாணவங்கி கணக்காளர் வெற்றிவேலு சுந்தரராஜாவின் அன்பு மனைவியும், கதிர்காமநாதன் (மக்கள் வங்கி யாழ்ப்பாணம், உமாதேவி, ஜெயராஜா, விக்கினராஜா, குகராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும், விக்கினேஸ்வரன் (முகாமையாளர் மக்கள் வங்கி யாழ்ப்பாணம்), சரோஜினிதேவி, ரதி (ஆசிரியை சஜிதா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வாகீஸ்வரன், விஜேந்தினி, பிரதாபன், பிரதீபன், வாணி ஆகியோரின் பேத்தியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 47, பிரப்பங்குளம் வீதி இல்லத்தில் நடைபெற்று, இன்று (9-10-86) வியாழன் மாலை 4-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C 5110

வெ. சுந்தரராஜா.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O; Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126